பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 21 சனிக்கிழமை (04-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:160

## குடாநாட்டில் 274 ஆலயங்களில் படையினர்!

யாழ்ப்பாணம்,மே4

குடாநாட்டில் 274 ஆலயங்களில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டிருக்கின்றனர்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

இந்து கலாசார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பங்குகொண்ட பிரதேச செயலர்கள் தமது பிரதேசங்களில் படையினர் நிலைகொண்டிருக்கும் ஆலயங்களின் விவரங்களை வெளியிட்டனர்.(உ-3)

# கடற்படைப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து ஈ.பி.டி.பியினர் தீவகத்தில் யுத்தநிறுத்த மீறல்

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் நேற்று முறையீடு

யாழ்ப்பாணம்,மே4

தீவகத்தில் கடற்படையின் புலனாய்வுப் பிரிவினரும், ஈ.பி.டி.பியினரும் மக்களுக்கெதிராகச் சித்திரவதை, பயமுறுத்தல், தொந்தரவு செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் யுத்தநிறுத்த மீறல் இதுவாகும்.

- விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மேற்கண்டவாறு முறையிட்டுள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் கண்காணிப்புக் குழு அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த முறைப்பாட்டை புலிகள் தெரிவித்தனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்து 2.1இன்படி இயல்பு நிலையை மீளக் கொணருவதற்கான நடவடிக்கைகள் என்ற தலைப்பில் -

சித்திரவதை, பயமுறுத்தல், ஆள் கடத்தல், பணம் பறித்தல், தொந்தரவு செய்தல் போன்றவை உள்ளடங்கிய - சாதாரண குடிமக்களுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் படகுகளின் மீதே வாகரையில் தாக்குதல்!

## பாரபட்சமற்ற விசாரணைக்கு ரணில் உத்தரவு!

கொழும்பு,மே4

மட்டக்களப்பு வாகரையில் மீனவர்களின் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தும்படியும், குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இதற்கான விசாரணைக்குழு ஒன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இச்சம்பவத்தில் தப்பிய முஸ்லிம் நபர் கண்காணிப்புக் குழுவிடம் வாக்குமூலம்

கொழும்பு,மே4

**வாகரைக் கடலில் வெடித்துச் சிதறியது மீனவர்களின் படகே. கடற்படையினரின் தாக்குதலிலேயே அது வெடித்துச் சிதறியது.**

**இச்சம்பவத்தில் தப்பிய முஸ்லிம் மீனவர் ஒருவர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது குறித்து நேரில் வாக்குமூலம் அளித்துள்ளார்.**

கடந்த புதனன்று மாலை வாகரைக் கடற்பகுதியில் படகு ஒன்று தீப்பிடித்து எரிந்து நாசமானது.

புலிகளின் இரண்டு படகுகளை (ட்றோலர்களை) கடற்படையினர் அடையாளம் கண்டு நெருங்கிய சமயம் அவற்றில் ஒன்று தன்பாட்டில் வெடித்துச் சிதறியதாகவும் -

மற்றைய படகு அப்பகுதியில் தென்பட்ட சிவிலியன் படகுகளுடன் இடையில் நுழைந்து தப்பிவிட்டதா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் மட்டு., திருமலைக்கு விஜயம்!

மட்டக்களப்பு,மே4

மட்டக்களப்பு வாகரைக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பான உண்மைநிலை குறித்து அறிவதற்காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புறுகோவிட் கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டு நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

விமானப்படையின் ஹெலி மூலம் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு வந்த அவர், விடுதலைப் புலிகளின் பகுதியான வாகரைக்குச் சென்று சம்பவம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார். பின்னர் விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் கரிகாலனுடன் கலந்துரையாடினார்.

நேற்று திருகோணமலை சென்ற அவர், அங்கு கடற்படை அதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வாகரைத் தாக்குதலில்

## தப்பிய சிங்கள, முஸ்லிம் மீனவர் 34 பேர் புலிகளின் பராமரிப்பில்

வாகரைக் கடலில் கடந்த புதனன்று கடற்படையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலில் தப்பியவர்கள் என்று கருதப்படும் 36 மீனவர்கள் தற்போது விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்புச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

மீனவர்களின் படகுகள் மீது கடற்படை நடத்திய தாக்குதலில் 36 மீனவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கரை சேர்ந்தனர். அவர்களைப் பொதுமக்கள் காப்பாற்றினர்.

காப்பாற்றப்பட்ட 36பேரில் 16பேர் சிங்களவர், 18பேர் முஸ்லிம்கள்.

இந்த மீனவர்களைக் கடல் வழியாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளைக் கோரியுள்ளனர்.

இதையடுத்து அவர்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளைப புலிகள் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-12)

## பேச்சுக்கு இடையூறாக இருந்தால் புலிகள் மீதான தடையை நீக்குங்கள்!

### ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் ஆலோசனை

கொழும்பு,மே4

நாட்டின் முக்கிய தேசியப் பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும். புலிகள் மீதான தடை, அவர்களுடன் பேசுவதற்குத் தடையாக இருந்தால் அதை நீக்க வேண்டும்.

ஐ.தே.கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கூட்டிய மாநாட்டில் ஐ.தே.கட்சியின் பெரும்பாலான பிரதிநிதிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதா? அல்லது பேச்சுக்காலத்தில் இடைநிறுத்தி வைப்பதா? என்பது குறித்து கருத்து அறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப... யுத்தநிறுத்தம் தொடர வேண்டும் எண்டு கும்பிட்டு, கோயில வீட்டுக் கிளம்பாமத் தவம் கிடக்கினம் போலை...!

## பதற்ற நிலைமை ஏற்பட்டதற்கு கண்காணிப்புக் குழுவும் காரணம்

### பிரதிநிதி கூறியதாகத் தகவல்

கொழும்பு,மே4

வாகரைக் கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவத்திற்குத் தாமும் பொறுப்பு என்று விடுதலைப் புலிகளுடன் இயங்கும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அறிவித்துள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

கடற்படையினர் ரோந்து செல்லும் இடப்பரப்பில் விடுதலைப் புலிகளின் படகுகள் செல்வது குறித்து உரிய எழுத்துமூல அறிவித்தல் எதனையும் தாம் விடுக்கத் தவறியமையே இருதரப்புக்கும் இடையில் பதற்றநிலை உருவாகக் காரணம் என்று கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஜோக்லண்ட் கூறியுள்ளார்.

இத்தகவலை வாய்மொழி மூலமே கடற்படைக்கு அறிவித்து, தாம் தவறிழைத்துவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

படகு வெடித்துச் சிதறியதுமே புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் சம்பந்தமான தரவுகள், வீடியோ நாடாக்கள் போன்ற விவரங்கள் அடங்கிய இறுதி அறிக்கை சர்வதேசக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி,தென்மராட்சியில் புலிகளின் அலுவலகங்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,மே4

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் திறக்கப்படவிருக்கின்றன.

வடமராட்சிக்கான அலுவலகம் நெல்லியடியில் எதிர்வரும் 6 ஆம் திகதியும் -

தென்மராட்சிக்கான அலுவலகம் சங்கத்தானையில் எதிர்வரும் 8 ஆம் திகதியும் -

உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு முன்னர் தடையை நீக்குவதை பகிரங்கமாக எதிர்க்க ஸ்ரீல.சு.க. முடிவு

கொழும்பு,மே4

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் புலிகள் மீதான தடையை நீக்க அரசு முயன்றால் அந்த முயற்சியை பகிரங்கமாக எதிர்ப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முடிவுசெய்துள்ளது.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பதினொரு பக்க அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளன.

முக்கிய முடிவுகள் வருமாறு:-

- பேச்சுகள் ஆரம்பமாகி அவை திருப்திகரமாக முன்னேற்றம் அடைந்தால் மட்டுமே புலிகள் மீதான தடையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர்சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற முழுநிலாநாள் கருத்தரங்கு நேற்று இடம்பெற்றது. ஈழத்தமிழர் போராட்டமும் இந்திய - தமிழகப் போக்கும் என்ற தலைப்பில் தமிழேந்தல் ஈழவேந்தன் கருத்துரையாற்றுவதையும், அதனைச் செவிமடுப்போரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



## தரைவழியாக ஆஸ்பத்திரிக்கு மருந்து!

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.போதனா வைத்தியசாலைக்கான ஒரு தொகுதி மருந்துப் பொருள்களும் மருந்துவ உபகரணங்களும் ஏ-9 தரைவழிப் பாதையூடாக மூன்று லொறிகளில் நேற்று எடுத்துவரப்பட்டன.

நேற்று மாலை யாழ்நகர் வந்து சேர்ந்த லொறிகளில் இருந்து இறக்கப்பட்ட மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் வைத்தியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்பு அந்த வீதி வழியாக லொறிகளில் மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டமை இது இரண்டாவது தடவையாகும்.

(ஐ-10-139)

# இந்திராவுக்கு இருந்த தொலைநோக்குப் பார்வை இப்போதைய இந்தியத் தலைவர்களுக்கு இல்லை!

## தமிழ் ஏந்தல் ஈழவேந்தன் உரை

யாழ்ப்பாணம்,மே4

இலங்கை மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான விடயத்தில் இந்திரா காந்திக்கு இருந்த தொலைநோக்குப் பார்வை தற்போதுள்ள இந்தியத் தலைவர்கள் எவருக்கும் இல்லை - இவ்வாறு நேற்று யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்ற - இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் - முழுநிலா நாள் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழ் ஏந்தல் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

'ஈழத்தமிழர் போராட்டமும் இந்திய - தமிழகப் போக்கும்' என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார். தமதுரையில் அவர் கூறியதாவது:-

இலங்கையில் உள்ள தமிழர்கள் இனத்தாலும், கலாசாரத்தாலும், நாகரிகத்தினாலும் இந்தியத் தமிழர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். அது தொப்புள் கொடி உறவு போன்றது.

ஐம்பது, அறுபதுகளிலேயே ஈழத் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பியவர் அறிஞர் அண்ணாத்துரை.

"இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் இலங்கைப் படையினரால் அழிக்கப்படுவார்களேயானால் அது தமிழகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால், இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும். எனவே, ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுவதன் மூலம் இந்தியா தன்னைக் காப்பாற்றிக்கொள்ளலாம்." - என்று நான் ஒரு தடவை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியைச் சந்தித்தபோது அவரிடம் கூறினேன். அந்தக் கருத்து அவருக்கு நன்கு பிடித்துக்கொண்டது. அந்தக் கருத்தை தமிழகத்துக்குப் போய் எல்லோருக்கும் பரவலாகத் தெரிவிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைத் தமிழர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்களால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுவதை இந்தியா பொறுத்துக்கொள்ளாது என்று அடித்துக் கூறிய பெருந்தலைவர் அவர்.

"இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்., இந்தியாவுக்கு எதிரானவர்" - என்று நான் மற்றொருதடவை இந்திராகாந்தியிடம் கூறினேன்.

"ஜே.ஆர்.இந்தியாவுக்கு மட்டும் எதிரானவர் அல்லர்; இந்திராவுக்கும்கூட எதிரானவர்" - என்று சிரித்துக்கொண்டு கூறினார் இந்திரா.

"திருமலைத் துறைமுகத்தில் எமது அனுமதியின்றி வெளியார் யாரும் நிலைகொள்வதை அனுமதிக்க மாட்டோம்" - என்று சூளுரைத்தவர் இந்திரா காந்தி.

இப்போது அதே திருகோணமலையை அமெரிக்காவிடம் இலங்கை தாரை வார்க்கும் நிலை வந்துள்ளது. இப்போதுதான் விழித்துக்கொண்டு திருமலைக்கு ஓடுகின்றார் இந்தியத்தூதுவர்.

இந்திராவின் மரணம் கேட்டு இலங்கைத் தமிழ்மண்ணே கண்ணீர்வடித்தது.

அவரது மரணச்சடங்கிற்கு பார்த்தசாரதி சகிதம் நான் சென்றேன். இந்திராவின் வீட்டில் இருந்து நாம் வெளியே வந்துகொண்டிருந்த சமயம் எதிரில் இந்திராவின் மாமியார் விஜயலட்சுமிப் பண்டிட் வந்துகொண்டிருந்தார். அவர் இந்திராவின் தந்தையாரான நேருவின் சகோதரி. ஐநா. சபைக் கூட்டத்திற்கு தலைமை வகித்த பெருமைக்குரிய பிரமுகர். அவர் யார் என்று தெரியாமல் இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் வீட்டுக்குள் நுழையவிடாது அவரைத் தடுத்தனர். நான் "இந்திராவின் மாமியார் அவர். பெரிய பிரமுகர். அவரை உள்ளே விடுங்கள்" - என்று கத்தினேன். அதைக்கேட்ட பின்னர்தான் அவரை அந்தப் பாதுகாப்புப் படையினர் உள்ளே நுழைய அனுமதித்தனர்.

இந்தியாவின் புகழ்பெற்ற ஒரு பிரமுகரைத் தெரியாத அளவிற்குத்தான் இந்தியப் பாதுகாப்புப் பிரிவினரின் செயற்பாடுகள் அன்றும் இருந்தன.

இந்திரா மறைந்த பின்னர் பார்த்தசாரதியை ஒரு தடவை சந்தித்தேன். "எனக்கு ஏன் இந்த நிலைமை?" என்று அழாத குறையாகக் குறிப்பிட்டு அவர் கவலைப்பட்டுக்கொண்டார்.

"தமிழனாக நான் பிறந்ததுதான் நான் செய்த தவறு" என்று அவர் மனம் நொந்துகொண்டார்.

இந்திரா இறந்து விட்டார்; மகன் கையில் ஆட்சி. தமிழரான பார்த்தசாரதி வெளியேற்றப்பட்டார்; வெங்கடேஸ்வரனும் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

எதற்கும் விலைபோகும் ரொமேஷ பண்டாரி பொறுப்புக்கு வந்தார். இலங்கைத் தமிழரின் நிலைமை அவலமாயிற்று.

அவருக்குப் பின் வந்தவர் டிக்ஸிற். இலங்கைத் தமிழருக்கு எதிராக இந்தியாவை முழு அளவில் திருப்பிவிட்ட கைங்கரியம் இவரைச் சார்ந்தது.

தாம் இழைத்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்வது போல இப்போது கருத்து வெளியிடுகின்றார் டிக்ஸிற். பதவியை விட்டு ஓய்வு பெற்ற பின்னர்தான் அவருக்கு தலைவர் பிரபாகரனின் தகைமையும், திறமையும், பெருமையும் புரிவது அவரது துரதிர்ஷ்டம்.

'அந்தத் தாய்க்கு இந்தத் தனயனா?' என்று மக்கள் நொந்து கொள்ளும் அளவுக்கு நடந்து கொண்டார் ராஜீவ் காந்தி.

"அந்தப் பெரிய இந்திய தேசத்துக்கு இந்தனூண்டு அறிவுள்ள பிரதமரும் (ராஜீவும்), இந்தளவு சிறிய இலங்கைக்குப் பெரும் குள்ள மூளையுள்ள ஜனாதிபதியும் (ஜே.ஆரும்) ஆட்சியில் இருப்பதே இவ்வளவு மோசமான நிலைக்குக் காரணம்" என்று தமிழர்கள் நொந்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டது.

1983ஆம் ஆண்டு பெப்ரவரியில் எமது மக்களின் மேம்பாட்டுக்கான பிரசாரத்துக்காக தமிழகம் செல்லப் பணிக்கப்பட்டேன்.

மூன்று மாத காலத்தில் எனது 'விஸா' முடிந்தது. அதற்குப் பின்னரும் நான் தங்கியிருந்து எனது பணியினைத் தொடர்ந்தேன். என்னை நாடு கடத்துவதற்காகத் தேடினார்கள். தலைமறைவாக இருந்து பணி தொடர்ந்தேன்.

1983ஜூலையில் இனக் கலவரம் வெடித்தது. இலங்கைத் தமிழரின் அவலநிலை இந்தியப் பிரதமர் இந்திராவுக்குப் புரிந்தது.

எங்களை இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்து, விருந்துபசரித்து, எமது கருத்துக்களையும் கேட்டறிந்து, காலவரையறையற்ற 'விஸா' தந்து போற்றினார்கள்.

அதன்பின்னர் அரசியல் சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டன.

தமக்குத் தலையாட்டும் புல்லுருவியான வரதராஜப்பெருமாள், இந்தியச் சொற்படி தமிழீழப் பிரகடனம் செய்து விட்டு இந்தியாவுக்குத் தப்பி ஓடிவந்தார். அவருக்கு, மனைவிக்கு, பிள்ளைகளுக்கு, உறவினருக்கு என்று பலகோடி ரூபா செலவிட்டு அவர்களைப் பேணுகிறது இந்திய அரசு.

எனக்குக் காலவரையறையற்ற 'விஸா' வழங்கிய இந்தியா, என்னை நாடு கடத்துகின்றது; இங்கு செல்லாக் காசு பெறாத - புல்லுருவி போன்று தனக்கு உதவுகின்ற - வரதராஜப் பெருமாளை அழைத்து கோடி கோடியாகச் கொட்டிச் செலவழித்து உபசரிக்கின்றது - என்ன விநோதம் இது?

தமிழகத்தைப் பொறுத்தவரை ஜெயலலிதாவை விட்டுவிடுங்கள். அத்தகைய நிலையிலிருந்து வந்த அவரிடமிருந்து அதற்கு மேல் நாம் எதிர்பார்க்கமுடியாது.

ஆனால், கருணாநிதி தமது 16 வயதில் இயக்கத்துக்கு வந்தவர். அவர் இன்று நடந்துகொள்ளும் விதத்தைப் பார்க்கும்போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

வை.கோ., நெடுமாறன், இராமதாஸ் போன்ற ஒரு சில தலைவரைத் தவிர ஏனையோர் தமிழக மக்களை விழிப்புற வைக்கத் தவறிவிட்டனர். மக்களின் அடிமை வாழ்வு அவர்களது அரசியல் சவாரிக்கு வசதியாகிவிட்டது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாங்கள் அழிகின்றோம் என்பதை உணர்ந்து, அதிலிருந்து தப்புவதற்காகப் போராடுகின்றார்கள். ஆனால், இந்தியத் தமிழர்களோ தாங்கள் அழிகின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளாமலேயே நாளுக்குநாள் அழிந்துகொண்டிருக்கின்றார்கள். அதுதான் வேதனைக்குரியது. இந்த நிலையைத் தமிழக மக்களைப் புரிந்துகொள்ளவிடாது தடுத்து வைத்திருப்பதே இந்தத் தலைவர்களின் போக்காகும்.

இந்தியாவில் ஆட்சிக்கு வரும் அரசு - அது பாரதீய ஜனதாக் கட்சி அரசு என்றாலும், காங்கிரஸ் அரசு என்றாலும் - அதன் சிந்தனை பிராமணீயத்தைப் பாதுகாப்பதுதான்.

தமிழர்கள் உரிமை பெறுவதும், திராவிடர்கள் தன்னாட்சி அடைவதும் பிராமணீயத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். பிராமணீயத்தைப் பாதுகாப்பதாக நினைத்துக்கொண்டு தமிழர்களை அடக்குமுறை வாழ்வில் தவிக்கவிட அவர்கள் விரும்புகின்றார்கள்.

ஈழத்தமிழர்கள் அடிமைப்படுத்த முடியாத ஓர் இனம் என்பதை உலகம் வியக்கவைக்கும் வகையில் நெறிப்படுத்தி நம்மை வழிப்படுத்தும் ஒரே தலைவர் பிரபாகரன்தான்.

யாருக்கும் விலை போகாத தலைவரை நாம் கொண்டிருக்கின்றோம். கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக உள்ள ஒரு வழிகாட்டியை நாம் பெற்றிருப்பது ஒரு பேறு.

தந்தை செல்வாவின் வழியில் தொடர்ந்த நாம், தம்பி பிரபாகரனின் வழிகாட்டலில் எமது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சியுரிமையைப் பெற்றுய்வோம் என்பது உறுதி.

தலைவர் பிரபாவின் அண்மைக் கால இராஜதந்திர நகர்வுகள் சர்வதேச சமூகத்தையே வியப்பில் ஆழ்த்தியிருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்றார்.

## கிணற்றின் கப்பிக் கயிற்றில் தொங்கிய இளைஞனின் சடலம்!

### மானிப்பாய்ப் பகுதியில் பரபரப்பு

மானிப்பாய்,மே4

மானிப்பாய் சந்தை ஒழுங்கையில் வீட்டுக் கிணறு ஒன்றின் கப்பிக் கயிற்றில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொதுச் சந்தையில் 24 ஆம் இலக்கக் கடையில் வியாபாரம் செய்துவந்த சிவலிங்கம் சிவகுமார் (வயது26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலத்தை மீட்ட மானிப்பாய்ப் பொலீஸார், அதனை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மானிப்பாய்ப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-15-90-100-139)

## கண்ணிவெடி அகற்றும் குழுவின் தலைவர் பாம்பு தீண்டி மரணம்!

(முல்லைத்தீவு,மே4

தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் களநிலைக் குழுத் தலைவர் சி.சிவஞானகரன் (முள்ளியவளை) பாம்பு தீண்டி மரணமடைந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பரந்தன் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையே இவரைப் பாம்பு தீண்டியதாகக் கூறப்பட்டது.

மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் மறுநாள் காலை அங்கு மரணமானார்.

இவர் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் ஆரம்பகால உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

## உசன் தேவாலயத்தில் நற்கருணை ஆராதனை

யாழ்ப்பாணம்,மே4

தென்னிந்திய திருச்சபையின் உசன் தேவாலயத்தில் இடம்பெயர்வின் பின்னர் மீண்டும் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் ஆராதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் பரிசுத்த நற்கருணை ஆராதனை இடம்பெறவுள்ளது. (ஐ-3)

## இளம்பெண் காயம்

யாழ்ப்பாணம்,மே4

சைக்கிளில் வந்த இளம்பெண் ஒருவர் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வானை விலகிச்செல்ல முற்பட்டபோது அந்த வானின் கதவுடன் மோதுண்டு காயமடைந்தார்.

குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வானின் சாரதி திடீரெனக் கதவைத் திறந்தபோது சைக்கிளில் வந்த பெண் அந்தக் கதவுடன் மோதுண்டு வீழ்ந்து தலையில் படுகாயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குணசிங்கம் ராதிகா (வயது 21) என்பவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## சைவ மாநாட்டில் நாளை விருது பெறும் பத்துப் பேர்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று ஆரம்பமான சைவ மாநாட்டின இறுதி நாளான நாளை பல்துறை சார்ந்த பத்துப் பேர் 'சிவகலா பூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

கைலாசபதி கலையரங்கில் நாளை மாலை 5 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவிருப்போர் விவரம் வருமாறு:-

- *கர்நாடக சங்கீதம்* - வி.கே. நடராசா
- *தமிழ், வடமொழி இலக்கியம்* - ச.பஞ்சாட்சரசர்மா
- *பண்ணிசை* - எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன
- *வில்லிசை* - நா.கணபதிப் பிள்ளை
- *நாதஸ்வரம* - எம்.பி.பஞ்சாபிகேசன்
- *கதாப்பிரசங்கம* - ந.சிவசண்முகமூர்த்தி
- *வயலின்* - உ.இராதகிருஷ்ணன்.
- *ஓவியம், சிற்பம்* - வை. சிவசுப்பிரமணியம்
- *தேர், சப்பறம், சிற்பம்* - சி.அமரசிங்கம
- *புராணபடனம்* - தி.பொன்னமபலவாணர்.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்) (ஐ-13)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கிளினிக்

யாழ்ப்பாணம்,மே4

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு தினமும் காலை 8.30 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையும் இயங்கும் என்று மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

சலரோக நோயாளர்களின் கிளினிக் சனிக்கிழமைகளிலும் -

உயர்குருதியமுக்கம், தொய்வு நோய், இருதய நோய் ஆகியவற்றுக்கான கிளினிக் செவ்வாய்க் கிழமைகளிலும் -

இடம்பெறவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

# குடியிருப்புகள் மீது ஜெற் விமானம் மோதி நொறுங்கியதில் ஐவர் பலி!

## இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் சம்பவம்

புதுடில்லி,மே4

இந்திய விமானப் படையின் மிக்-21 ஜெற் போர்விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி குடியிருப்புப் பகுதி மீது வீழ்ந்து நொறுங்கியதில் குறைந்தது 5பேர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்தனர்.

வடக்கு மாநிலமான பஞ்சாப்பின் ஜலந்தர் நகரில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வழமையான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்று விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தின் இயந்திரத்தில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த விமானம் கீழ்நோக்கி விரைய ஆரம்பித்தது. உடனே விமானி விமானத்தை விட்டு பாதுகாப்பாக வெளியே குதித்துத் தப்பிக்கொண்டார்.

கீழ்நோக்கி விரைந்த விமானம் அடுக்குமாடிக் குடியிருப்பு மீது மோதி நொறுங்கியது.

"சண்டை விமானம் எரிந்தபடி இருமுறை வானில் சுழன்றது. பின்னர் கீழ் நோக்கி விரைந்ததை நான் கண்டேன்" - என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த சுனில் மல்கோத்ரா.


விமானம் மோதியதில் மூன்று கட்டடங்கள் தீப்பற்றி எரிய ஆரம்பித்தன. பின்னர் தீயணைப்புப் படையினர் வந்து அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ரஷ்யத் தயாரிப்பான மிக்-21ரக விமானங்களைப் பராமரிப்பதில் இந்தியா திறம்படச் செயற்படவில்லை என்றும் -

இதனாலேயே அண்மைக் காலங்களில் மிக்-21 ரக விமானங்கள் பல, விபத்தில் சிக்கிக்கொண்டன என்றும் -

பரவலான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்திய விமானப் படையில் உள்ள போர்விமானங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை முன்னாள் சோவியத் யூனியனிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டவை. ஏனையவை பிரிட்டன் மற்றும் பிரான்ஸில் உருவாக்கப்பட்டவை. (ம)



பஞ்சாப்பில் வீழ்ந்த ஜெற் விமானத்தின் சிதைந்த பகுதி

# பதவியிலிருந்து விலகமாட்டேன் என்கின்றார் ராணி எலிசபெத்

'ராணி' பதவியில் இருந்து நான் விலகப்போவதில்லை. அதிலிருந்தவாறே பிரிட்டிஷ் மக்களுக்கு சேவையாற்றப் போகின்றேன்.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ராணி எலிசபெத்.

எலிசபெத், ராணியாகப் பதவியேற்று 50 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. இதனையொட்டி ராணியின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் தற்போது பிரிட்டனில் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சமயத்தில் -

இளவரசர் சார்ள்ஸ் அரச பதவியை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ராணி தனது பதவியில் இருந்து விலகவேண்டும் என்ற கருத்து பிரிட்டனில் நிலவி வருகின்றது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும் தனது பொன்விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ராணி எலிசபெத் உரையாற்றினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

கடந்த 50 ஆண்டுகளாக எனது பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்றேன். இந்தப் பணியில் எனக்கு உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது குடும்பத்தினரின் ஆதரவுடன் எனது அரச பதவியைத் தொடர முடிவு செய்துள்ளேன். ராணி பதவியை விட்டு விலகும் எண்ணம் எதுவும் எனக்குக் கிடையாது.

பிரிட்டிஷ் மக்களின் வளமான வாழ்வுக்காகத் தொடர்ந்து எனது பதவியில் இருந்தவாறு சேவையாற்ற உள்ளேன் - என்றார். (ம)

### சிறைத் தண்டனை

'மெலிஸ்சர்' என்ற கணனி வைரஸை உருவாக்கிய அமெரிக்கரான டேவிட் சுமித் (வயது 34) என்ற கணனிப் பொறியியலாளருக்கு 20 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுமார் 4லட்சம் ரூபா அபராதமும் வழங்கப்பட்டது. டேவிட் 1999ஆம் ஆண்டு 'மெலிஸர்' வைரஸை உருவாக்கி ஈ-மெயில் மூலம் அதனைப் பரப்பினர். இதனால் உலகம் முழுவதும் தகவல் தொடர்பு பாதிக்கப்பட்டது.

# மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக விரைவில் மாநாடு

## அமெரிக்கா கூட்டும் என கொலின் பவல் அறிவிப்பு

நியூயோர்க்,மே4

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மாநாடு ஒன்றைக் கூட்டப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல் நேற்று இதனை அறிவித்தார். இன்னும் இரு மாதங்களுக்குள் இந்த மாநாட்டைக் கூட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

நீண்டகாலமாகத் தொடரும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான வரைவை நிறுவுவதே இந்த மாநாட்டின் நோக்கமாக இருக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாநாடே மத்திய கிழக்கு விவகாரத்துக்கான இறுதிச் சந்தர்ப்பமாக இருக்கும் என்பதைப் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் புரிந்துகொள்ள வேண்டும் என்று கொலின் பவல் கேட்டுக்கொண்டார்.

தற்போது கிடைத்துள்ள தடை நீக்கத்தைப் பயன்படுத்தி பலஸ்தீனத தலைவர் யஸீர் அரபாத், இஸ்ரேலுக்கு எதிரான் தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ்ஷும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகள் குறித்து ஒருபுறம் பேசிக்கொண்டிருக்க மறுபுறத்தில் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீன நகர்களில் தமது இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை 50 இஸ்ரேலிய டாங்கிகள் பலஸ்தீன நகரான நப்லஸினுள் புகுந்து நடவடிக்கையில் ஈடுபட்டன. அங்கு நடந்த துப்பாக்கிச் சண்டையில் பலஸ்தீனப் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதற்கிடையில் -

பலஸ்தீனத்தின் ஜெனின் அகதி முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் அழிவுகள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐ.நா. குழுவைக் கலைத்துவிட்டதாக ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் அறிவித்துள்ளார். (ம)



அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல், ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர் இவானோவ் ஆகியோர் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில்....

# தாய்வான் தொடர்பான விடயத்தால் அமெரிக்காவுடனான உறவு பாதிப்பு

## சீன துணை அதிபர் கூறுகிறார்

நியூயோர்க்,மே4

தாய்வான் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டால் அந்த நாட்டுடனான சீனாவின் உறவுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சீனாவின் துணை அதிபர் ஹு ஜின்டஓ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அமெரிக்க வர்த்தகர்களின் கூட்டத்தில் உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார்.

இரு நாடுகளிடையேயான உறவுகளை வளர்ப்பதில் தாய்வான் விவகாரம் முட்டுக்கட்டையாக உள்ளது. இந்த விவகாரத்தைச் சரிவரக் கையாண்டு இரு நாட்டு உறவுகளை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

தாய்வான், சீனாவின் ஒரு பகுதி என்றே சீனா கூறிவருகின்றது. ஆனால் சீனாவை மீறி அமெரிக்கா தாய்வானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்து வருகின்றது. இதனால் அமெரிக்கா மீது சீனா சீற்றங்கொண்டுள்ளது.

ஆனால் சீனாவின் அடுத்த அதிபராக உள்ள ஹு ஜின்டஓவின் உரையில் அமெரிக்காவை ஆத்திரமூட்டக்கூடிய எந்த விடயமும் குறிப்பிடப்படவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக அமெரிக்கா வந்து சேர்ந்த ஜின்டஓ அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷைச் சந்தித்துப் பேசினார். சீனாவில் மனித உரிமைகளைப் பேணும் விடயம் மற்றும் அமெரிக்கா ஆரம்பித்துள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பன குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர். (ம)

### இருவேறு மோதல்களில்

# 51 தீவிரவாதிகள் நேபாளத்தில் பலி!

காத்மண்டு,மே4

நேபாளத்தில் நேற்றுமுன்தினம் பின்னிரவில் இடம்பெற்ற மோதல்களில் 51மாவோயிஸ தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

"இந்த மோதல்கள் இரு மாவட்டங்களில் இடம்பெற்றன. அவற்றில் மிக மோசமான சண்டை இமய மலைப் பகுதியில் இடம்பெற்றது. அங்கிருந்து மேலதிகத் தகவல்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மேலும் பல தீவிரவாதிகள் அங்கு உயிரிழந்திருக்கக்கூடும்" - என்று உள்துறை அமைச்சர் தேவேந்திரா ராஜ் கன்டல் தெரிவித்தார்.

தலைநகர் காத்மண்டுவில் இருந்து 300கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வின்னி என்ற இடத்தில் நடந்த சண்டையில் 26தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாகவும் -

தலைநகரில் இருந்து மேற்காக 450 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள டொடி என்ற இடத்தில் நடந்த சண்டையில் 25தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாகவும் -

தமது தரப்பில் சேதம் ஏதும் இல்லை என்றும் -

இராணுவம் தெரிவித்தது.

ஆனால் இராணுவத் தரப்பிலும் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் அதனை இராணுவம் மறைக்கின்றது என்றும் உள்ளூர்ச் செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன.

இந்த மோதல்களின்போது தீவிரவாதிகளிடம் இருந்து பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களும் வெடிப்பொருள்களும் கைப்பற்றப்பட்டதாக உள்துறை அமைச்சர் கூறினார். (ம)



# கி.திமோர் தலைவர் குஸ்மாவே மேகவதியை சந்தித்துப் பேச்சு

ஜகார்த்தா,மே4

கிழக்குத் திமோர் அதிபர் சனானா குஸ்மாவே, இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகர்னோ புத்திரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்களுக்கு நடைபெற்றது. இந்த மாத இறுதியில் கொண்டாடப்படவுள்ள கிழக்குத் திமோர் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மேகவதிக்கு அழைப்பு விடுப்பதற்காகவே குஸ்மாவே இந்தோனேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

ஐ.நா. விமானம் ஒன்றில் ஜகர்த்தா விமான நிலையத்தில் வந்திறங்கிய குஸ்மாவே, அங்கிருந்து நேரடியாக அதிபர் மாளிகைக்குச் சென்றார்.

இந்தோனேஷியாவின் ஒரு பகுதியாக இருந்த கிழக்குத் திமோர் ஐ.நாவின் தலையீட்டுடன் 1999ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.

அதன் பின்னர் இரு நாட்டு உயர் தலைவர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பது இதுவே முதற்றடவையாகும். தான் வழங்கிய அழைப்பை மேகவதி நல்ல முறையில் பெற்றுக் கொண்டதாக குஸ்மாவே தெரிவித்தார்.

ஆனால் கிழக்குத் திமோர் சுதந்திரதின நிகழ்வில் மேகவதி கலந்து கொள்ளமாட்டார் என்று இந்தோனேஷிய நாடாளுமன்ற அலுவலர்கள் தெரிவித்தனர். (ம)

### விமானத் தாக்குதலில் ஒருவர் பலி!

பக்தாத்,மே4

கடந்த சில தினங்களில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார்; மூவர் காயமடைந்தனர் என்று ஈராக் அறிவித்துள்ளது.

துருக்கியில் உள்ள தளத்திலிருந்து புறப்பட்ட விமானங்களே இந்தத் தாக்குதலை நடத்தின.

ஆனால் அமெரிக்கா இந்த விடயத்தை மறுத்துள்ளது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் முட்டாஸ் கடை சந்திக்கு அருகில் **12'x30'** அளவு கொண்ட கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல.216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) (3419)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக கட்டப்பிராய். (3388)

நல்ல இன Dashund நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு அத்துடன் ஒரு Dashund ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3374)

Concrete பூச்சாடிகள், குறோட்டன், Cyprus மற்றும் பூக்கன்றுகள், Diamond புறாக்கள், யமுனாபாரி மறி ஆடுகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3375)

3' தொடக்கம் 3 3/4' வரை சுற்றுள்ள தேக்க மரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M.இராசமலர், கிருஷ்ணா தொலைத்தொடர்புநிலைய அண்மைய ஒழுங்கை, புலோலி அலீலது செல்வம் எண்ணெய்க்கடை, பலாலி றோட், திருநெல்வேலி. (3418)

மரத்தளபாடங்கள், அலுமாரி, மேசைகள், குஷன்செற்றி, இரும்புப் பெட்டகம், கடைகளுக்குரிய அலுமினிய கண்ணாடி சோக்கேஸ்கள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.216, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்). (3420)

நல்லின டோமன் பின்சர் (DOBERMAN PINSCHER) 11/2 மாத ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3425)

பிறவுண் வீதி, மிருகவைத்திய சாலைக்கு அண்மையில் BROILER, கல்பேட் இறைச்சிக் கோழிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.18, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (3424)

40 நாள்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட நல்லின அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை.இரத்தினசபாபதி, 25/16, ஒடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3421)

TECHNICS PIONEER SUNSUI ONKYO LO-D BOX வகைகளும் இவற்றிற்குரிய AMPLIFIER, PIONEER, JVC, AIWA, CD SET வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சண்முகநாதன், முத்தட்டுமடம், K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு. (3377)

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய நல்லின அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தயாநிதி, கொக்குவில் மேற்கு, (பிடாரி அம்மன் கோவிலுக்கு அருகில்) (3378)

Pantain-ஆட்டப்புறா, ஜிப்சொன், சைனா ஆகிய புறாக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. வரதராஜா, இலட்சுமி பவான்கபே, புனித அந்தோனியார் கோவில் அருகில், Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (3376)

## வீடு விற்பனைக்கு

இல.3,சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள (பிரதான வீதிக்கு அண்மையில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.யோகேந்திரன், 29/53, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3383)

## தவறிவிட்டது

நா.லோகுலன் ஆகிய எனது வங்கி வைப்பு சான்றிதழ்கள் மற்றும் நீல நிற அல்பம் ஒன்றும் 30-04-02 செவ்வாய்க்கிழமை கொடிகாமம் ஊடாக சாவகச்சேரியில் இருந்து பருத்தித்துறை செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். [illegible] பி தொலைத் தொடர்பகம், கண்[illegible], நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. T.P 070-212901 (3389)

## மணமகள் தேவை

கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி பயின்ற, சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 09.10.1976இல் பிறந்த, அச்சுவினி நட்சத்திரத்தில் 8இல் செவ்வாய் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: க.அரியகுணராஜா, இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி. (3332)

27.07.1960 பூரநட்சத்திரம் (பாவம் குறைந்த) லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கும் 06.10.1960 அச்சுவினி நட்சத்திரம் (பாவம்குறைந்த) சுவிஸ் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கும் மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 770, பருத்தித்துறை வீதி, நல்லூர். (3429)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3293)

GREEN VALLY இன (விமானம் மூலம் தருவிக்கப்பட்ட) முதல் தரமான புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் கோழிகள் நியாய விலையில் கொள்முதலும் செய்யப்படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (3426)

## தேவை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை தரப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (3373)

## வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல் கலை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்: 25-05-2002 8.30 மணிக்கு (புதியநேரம்). அதற்குமுன் பதிவுசெய்யவும். செல்வி கீத்தனா, சிவன் கோயிலடி, மயிலணி சுன்னாகம். (3417)

Maths, English O/L A,B,C பெறுபேறடைய ஆண்டு 9,10 ஆங்கிலம் விசேடமாக A/L G.A.Q. கற்பிக்கப்படும்.B.Sc.(Cey.) 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (3384)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய் நீங்குமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள்! தொடர்பு: டாக்டர் த.சிவானந்தன் பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 264, பலாலி வீதி, கந்தர்மடம். (3395)

## அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம்

தென்மராட்சி,மே4

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கல்வி வலய அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் சேவையில் வகுப்பு 1, வகுப்பு 2:1, வகுப்பு 2:II ஆகிய தரத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியுமெனவும், விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வலய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் "பாலா" இயக்கிய "நந்தா" என்னும் தமிழ்த் திரைப்படம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## சங்கத்தானையில் பதிவாளர் அலுவலகம்

தென்மராட்சி,மே4

தென்மராட்சி பிரதேச பதிவாளர் அலுவலகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

இடம்பெயர்வின்போது பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் இந்த அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## தனங்களப்புப் பகுதியில் கண்ணி அகற்றும் பணி ஆரம்பம்

தென்மராட்சி,மே4

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்க கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் தற்போது தனங்களப்புப் பகுதியில் மேற்கொண்டு வரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது குண்டுகள் அடுத்தடுத்து வெடிக்க வைக்கப்படுகின்றன.

இந்தக் குண்டுச் சத்தங்களால் சாவகச்சேரிப் பகுதி அதிருகிறது. (க-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 08 - 1925



மறைவு 04 - 04 - 2002

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

அன்பினால் தெய்வம் ஆனாய்
ஆர்க்குமே உதவுகின்ற
பண்பினால் சிறந்து வாழ்ந்தாய்
பற்றினால் எம்மை எல்லாம்
கண்ணெனப் போற்றலானாய்
காலங்கள் பல சென்றாலும்
நின்னை நாம் மறத்தல் உண்டோ?
நெஞ்சத்தால் வணங்குகின்றோம்.

*19, 2ஆம் ஒழுங்கை,*
*பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்* (3396)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

PRINCE
பிரின்ஸ்




குவின் லாவண்யா

ஏகவிநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
காட்சியறை 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 324261-5, 337283-5, 436779 பக்ஸ் : 446554
295, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 575666

நாடெங்குமுள்ள வியாபாரிகளிடம் இப்போது கிடைக்கும்

(C/21338)

## அரசாங்க அறிவித்தல்

### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

### 2002ஆம் ஆண்டுக்குரிய வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள பின்வரும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான பொருள்களை வழங்கி சேவிஸ் செய்வதற்கும், பொருள்களை வழங்காது சேவிஸ் செய்வதற்குமான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2002. 05. 31ஆம் திகதி பி.ப. 2. 30 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியவாறு *அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்* என விலாசமிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது கேள்விப்பத்திரப் பெட்டியிலோ இடவும்.

**01. பிக்கப்**
**02. வான்**
**03. கார்**
**04. மோட்டார் சைக்கிள்**
**05. லொறி**

க.சண்முகநாதன்,
*அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,*
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(C/22013)

## ஆள்கள் தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்ணும் ஓவ்செற் வேலை செய்ய ஆர்வமுள்ள ஆணும் தேவை. திருநெல்வேலி நல்லூர் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

சனி, ஞாயிறு தினங்களிலும் ஏனைய தினங்களில் பிற்பகல் 3 மணிக்குப் பின்னரும் தொடர்புகொள்ளவும்.

**சூர்யா ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
(3416) **320, பலாலி வீதி, கந்தர்மடம்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்லையா நடராசா
(C.T.B. நடராசா)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் 39/4, விகாரலேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா நடராசா (ஓய்வுபெற்ற பதில் கணக்காளர், இ.போ.ச. யாழ்ப்பாணம், வவுனியா) 29.04.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் முகுந்தன், பாலமுரளி, துஷ்யந்தன், நளாயினி, நிரந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சியாமிளா, செல்வசோதி ஆகியோரின் மாமனாரும் யெகோசுவன், அருள்ராஜ், அனுராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.04.2002 செவ்வாய்க்கிழமை 39/4, விகார லேன், வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது என்பதனை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
த.செல்வசோதி,
*மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்,*
*பூந்தோட்டம், வவுனியா.*

(சி-22010)

உதயன்

# தொடரும் மறியற்போர்

நிரந்தர நியமனம் வழங்குவது உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் மேற்கொண்டு வரும் மறியற் போராட்டம் காரணமாக யாழ்.வலயக் கல்வித் திணைக்களம் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்களின் மறியற்போராட்டம் காரணமாகக் கூட்டுறவுத் திணைக்களத்தின் அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை மறியற்போராட்டங்கள் தொடர்கதையாகிவிட்டன.

இத்தகைய போராட்டங்களை நடத்தும் நமது சகோதரர்களின் ஆதங்கங்களை - போராட்டத்துக்கான காரணங்கள் - கொச்சைப்படுத்துவதோ, குறைத்து மதிப்பிடுவதோ, புறக்கணிப்பதோ எமது நோக்கமல்ல. அவர்களது மனவுணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொள்ள முயற்சிக்காமல் அவர்களைப் புண்படுத்துவதும் எமது எண்ணமல்ல.

எதற்கெடுத்தாலும் 'மறியல்' என்ற 'பாஷன்' உருவாகிவிடுமோ என்னும் எண்ணம் பொதுமக்கள் மனதில் ஊறி வருவதைப் பிரதிபலிக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை ஆசிரிய நியமனங்கள், கணக்காய்வாளர் நியமனங்கள் என்று தொடங்கி ஒவ்வொரு விடயத்திலும் குளறுபடிகளும், வீண் தாமதங்களும், முறைகேடுகளும் தாராளமாகப் பரவிக் கிடக்கின்றன.

இத்தகைய போக்கினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் மன உளைச்சலை வெறும் எழுத்து விமர்சனங்கள்மூலம் நாம் மேலும் கூட்டக் கூடாது என்பது வாஸ்தவம்தான்.

என்றாலும், இத்தகைய மறியற்போராட்டங்களின் ஒட்டுமொத்தப் பாதிப்பு, விளைவுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடும் நமக்குண்டு என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

அரச நியமனங்கள், கொடுப்பனவுகள், நிவாரண விநியோகம் போன்றன தொடக்கம் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான விவகாரங்கள்வரை வடக்கு - கிழக்கு மக்கள் உரிய முறையில் நடத்தப்படுவதில்லை என்பது கண்கூடு.

இத்தகைய ஒழுங்கு முறையின்மைக்கு கொழும்பு அரசும், கொழும்பில் உள்ள நிர்வாகிகளும் பெரும்பாலும் காரணம் என்பது நமக்குத் தெரிந்ததுதான். ஈழத்தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்தும் அவர்களது போக்குத்தான் இதற்கு அடிப்படை.

அதையும் மீறி, தமிழ் மக்களுக்கு - குடாநாட்டு மக்களுக்கு - கொழும்பு அரசினால் அனுமதிக்கப்படும் விடயங்களை அவர்களுக்குக் கிடைக்கவிடாமல் தடுப்பதில் மாகாண நிர்வாகத்திலும் பிற இடங்களிலும் இருக்கும் நமது அதிகாரிகளும் முக்கிய பங்கு வகிப்பது மறந்துவிடக்கூடியதல்ல.

இத்தகைய அநீதிகளுக்கு எதிராக - நீதி பெறுவதற்காக - தங்களுக்கு இழைக்கப்படுகின்ற அநியாயத்தைப் பகிரங்கப்படுத்தி, அம்பலப்படுத்துவதற்காக - பாதிக்கப்பட்டோர் வேறுவழியின்றி, மறியற் போராட்டம் போன்ற வழிமுறைகளை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

ஏதேனும் ஒரு விடயத்துக்காக ஒன்றுபட்டிருக்கும் அல்லது ஒன்றுபடக்கூடிய நிலையில் இருக்கும் ஒரு பிரிவினருக்கு, மறைமுகமாக இயங்கி, காய்களை நகர்த்தி அவர்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்துவதும் -

அவர்கள் போராடப் புறப்பட்டதும் ஏதோ ஆபத்பாந்தவர்கள்போல தாங்கள் போய் அவர்கள் முன்னால் குதித்து, பிரச்சினையைத் தீர்த்து, 'அப்ளாஸ்' வாங்கி அதன் மூலம் அரசியல் லாபமீட்ட முயல்வதும் -

கடந்த சில வருடங்களாக நமது மண்ணில் அரங்கேறி வந்த அரசியல் கோமாளித்தனங்களில் அடங்கும்.

இத்தகைய அரசியல் கோமாளித்தனம் இப்போது குறைந்துவிட்டாலும் பழையதன் தொடர்விளைவுகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.


போராட்டத்துக்கான நியாயங்கள் ஒருபுறமிருக்க, உயர்தரப் பரீட்சை நடந்துகொண்டிருக்கும்போது கல்வித் திணைக்களம் மறியல் போரினால் மூடப்பட்டிருப்பதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சாதுரியத்தினால் திணைக்களம் மூடப்பட்டிருந்தும் பரீட்சை நடவடிக்கைகள் தங்கு தடையின்றித் தொடர்வதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும்.

விடுமுறை முடிந்து பாடசாலைகள் திறந்துவிட்டன. பாடசாலைகளின் அன்றாடப் பிரச்சினைகளுக்காகவோ, ஆசிரியர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்க்கவோ திணைக்களத்தை நாடமுடியாத நிலை. தொடர்ந்து கல்வித் திணைக்களம் மூடப்பட்டிருந்தால் ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகூட தாமதமாகிவிடும்.

எனவே, மறியற்போராட்டம் நடத்துவோரின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து - நீதியோடு - பரிசீலித்துத் தீர்வு காண்பதும் -

யதார்த்த நிலைமைகளைக் கவனத்தில் எடுத்து போராட்ட முறைகளை சம்பந்தப்பட்டோர் வகுத்து, மாற்றிக்கொள்வதும் - இன்றியமையாதவையாகும்.



நேற்று நல்லை ஆதீனத்தில் ஆரம்பமான சைவ மாநாட்டில் கலந்துகொண்ட மாவை ஆதீன கர்த்தா சு.து.சண்முகநாதக் குருக்கள், இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி, சென்னை லயோலாக் கல்லூரி தமிழ்ப் போராசிரியர் அ.பாலநாவாயன், சென்னை பல்கலைக்கழக தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணன், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணாநந்தா மற்றும் நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# யாழ்நகரில் சைவ மாநாடு கோலாகலமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் சைவ மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை காலை நல்லை ஆதீனத்தில் கோலாகலமாக ஆரம்பமானது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் மங்கள இசையுடன் ஆரம்பமான இம் மாநாட்டில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஆத்மகணாநந்தா, மாவை ஆதினகர்த்தா மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள், இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து வாழ்த்துரையை சென்னை லயோலாக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் அ.பாலநாவாயன் நிகழ்த்தினார். பின்னர் இந்து சமயப் பேரவையின் 'இந்து தர்மம்' நூல் வெளியீடு இடம்பெற்றது. வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதிகளை வர்த்தகப் பிரமுகரான சற்குணராஜாவும், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதனும் பெற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணனின் 'மேன்மைகொள் சைவநீதி' என்னும் தலைப்பிலான உரையும் இடம்பெற்றது.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமான மாலை அமர்வுக்கு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமை தாங்கினார். வாழ்த்துரையை மல்லாகம் மாவட்ட நீதிபதி க.சுப்பிரமணியமும் தொடக்கவுரையை சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணனும் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து 'ஆலய வழிபாட்டில் சிவாசாரியரின் பங்கு' என்னும் தலைப்பில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் 'சைவ ஆலயக் கிரியைகள்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக் குருக்களும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் பெரியபுராணம் சுட்டும் சமூகப்பணி என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.பாலநாவாயன் உரை நிகழ்த்தினார். கதாப்பிரசங்கம், தெய்வீக இசையரங்கு என்பனவும் இடம்பெற்றன.

(க-8-13)



நேற்றைய சைவ மாநாட்டில் வெளியிடப்பட்ட 'இந்து தர்மம்' நூலின் முதற் பிரதியை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் - பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி கோபாலகிருஷ்ண ஐயரிடமிருந்து பெறுவதை முதறபடத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

# தொடரும் கணக்காய்வாளரின் போராட்டத்திற்கு ஆதரவு

யாழ்ப்பாணம்,மே4

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த மூன்று தினங்களாக கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்கள் மேற்கொண்டுவரும் மறியற்போராட்டத்துக்கு யாழ்.மாவட்ட பட்டதாரிகள் சங்கமும் அதனுடன் இணைந்த தேசிய ஐக்கிய பட்டதாரிகள் சங்கமும் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

தமது ஆதரவை வழங்கி அவை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஐந்து வருடங்களாகக் குறைந்த சம்பளத்தில் சேவை அடிப்படையில் கடமையாற்றிவரும் உதவிக் கணக்காய்வாளர்களுக்கு அவர்களின் வேலை தொடர்பான அனுபவத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் முன்னுரிமை வழங்கி உரியவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்கு சாதகமான முடிவைப் பெற்றுக்கொடுக்குமாறு கோருகின்றோம்.

அவர்களுக்குச் சாதகமான முடிவு கிடைக்கும் வரையும் எமது சங்கங்கள் பூரண ஆதரவை வழங்கும் - என்றுள்ளது.

இதுபோன்று வன்னிப் பிரதேச உதவிக் கணக்காய்வாளர்களும் இந்த மறியற்போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். (க-10-86)

## காசநோய் விழிப்புணர்வு நாடகம்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள காசநோய் தொடர் பான விழிப்புணர்வு நாடகம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொக்குவில் பகுதியிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மானிப்பாய் மற்றும் சங்கானைப் பகுதிகளிலும் இடம்பெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதி மக்களைத் தவறாது சமுகமளித்துப் பயன்பெறுமாறு சமுதாய மருத்துவத்துறையினர் கேட்டுள்ளனர். (க-10)

**நாளை**

சித்திரை 22
ஞாயிற்றுக்கிழமை
(05.05.2002)
திதி : நவமி
முழுநாளும்
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 1.07 வரை
சுபநேரம் 8.56 - 10.26
ராகுகாலம்: 4.26 - 5.56
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உனக்குத் தேவையானதை வாங்கவேண்டாம். எது இல்லாமல் முடியாதோ - அதை வாங்கினால் போதும்.

# சைவமாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை நடக்கும்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் சைவ மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

காலை அமர்வுக்கு திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமை வகிப்பார். வரவேற்புரையை பேராசிரியர் வ.ஆறுமுகம் நிகழ்த்துவார். வாழ்த்துரையை மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜாவும், தொடக்கவுரையை பேராசிரியர் சபா. ஜெயராசாவும் நிகழ்த்துவார்கள்.

கந்தபுராணம் சுட்டும் சமயவாழ்வு, பெண்கள் காட்டிய அறநெறி, பெரியபுராணத்தில் பெண்கள், யாழ்ப்பாணத் தல புராணம் என்னும் தலைப்புக்களில் முறையே சைவப்புலவர் ச.திருஞானசம்பந்தபிள்ளை, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன், நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப.கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

பிற்பகல் 2.15 மணிக்கு ஆரம்பமாகும் மாலை அமர்வில் வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் கி.கந்தவேள் நிகழ்த்துவார். வாழ்த்துரையை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கரும், தொடக்கவுரையை பல்கலைக்கழத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும் நிகழ்த்துவார்கள். தொடர்ந்து 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.பாலநாவாயனும் 'அவரா அன்பின் அரன்கழல் செலுமே' என்னும் தலைப்பில் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணனும் சொற்பொழிவாற்றுவர்கள். தொடர்ந்து சிவகலாபூஷணம் விருது வழங்கி கலைஞர்கள் கௌரவிப்பும், பண்ணிசை, நாட்டிய அஞ்சலி என்பனவும் இடம்பெற்று சைவமாநாடு நிறைவடையும்.(க-8)

# மக்களின் நலம் வேண்டி சண்டிஹோமம்

வடமராட்சி,மே4

நாட்டின் நன்மை கருதியும், மக்கள் சமாதானமும் சகல சௌபாக்கியங்களும் பெறவேண்டியும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலில் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சண்டிஹோமமும், 1008 சங்காபிஷேகமும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் கதிரை மலை சிவன்கோயில் பிரதமகுரு சிவப்பிரம்ம ஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். (க-173)

| | | | |
|---|---|---|---|
| | சூ. | செவ். புதன் சனி ரா. வெள்ளி | வி. |
| | இராசிச் | சக்கரம் | |
| சந். | | | |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 05.05.2002 ~ 11.05.2002

### 08.05.2002 ஆரம்பம் 28.05.2002 வரை காண்டாவனம் அக்கினி நாளாகும்

**மாற்றம்: அவிட்டம், சந்திரன் மகரம் இராசியில் நிற்கும்.**

**காலம் மாற மனிதக் கருத்துக்களும் மாறும். மனங்களின் பரிணாம வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து பலவித அரசியலில் அபிப்பிராய, அனுபவக்கீற்றுக்கள் உதயமாகும். எளியாரை வலியார் வருத்த, வலியாரை இறைசக்தி கொண்ட கிரகங்கள் தண்டிக்கும். கலகம் பிறந்தபடி இருக்கும். கிரகங்கள் ஆவணிவரை சூடாக இருக்கும். மக்கள் தெய்வ வழிபாடு செய்வதனால் அமைதி பெறலாம்.**

## மேடம்

ஜனனக் குறிப்பில் 1,2,4,7,8,12 ஆம் இராசிகளில் செவ்வாய் இருந்தால் தோஷமாகும். அதனால் திருமணம் தடையாகும். குழந்தைகளுக்கு தோஷம் வரும், எதிலும் தடை தாமதம் ஏற்படும். தீய செய்கை, எதிர்பாலாருடன் வாக்குக் கலகம், அளவுக்குமீறிய ஆசை, புத்திரருக்காக அல்லது சகோதரர்களுக்காக ஓடியாடித்திரிதல், இடமாற்றங்கள், புத்திசாலித்தனமில்லை, சூட்டுவருத்தங்கள், வயிற்றுநோ, கண்கூச்சம் என்பன கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். பாதுகாப்புத்துறை, அழகு சாதனங்கள் வியாபாரம், மருந்துத் துறை, தோட்டத்துறை நற்பலன்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

## இடபம்

கல்லில் சிறந்தது கருங்கல். அதனால் தெய்வச் சிற்பங்களை உருவாக்குகிறார்கள் போலும். உறுதியின் இடமான தெய்வசக்திப் பீடங்களில் நிலையான தர்மம் செழித்தோங்குமா? தொழில் ஸ்தானத்தில் கொந்தளிப்பு. வேலியே பயிரை மேயும் காலமாகும். சனி, செவ்வாய் கூடிய காலமாகும். வீட்டிலும் நிம்மதி இருக்காது எங்கும் பிரச்சினைகள் தோன்றும் நிலை. பொருள் தவறலாம். அல்லது களவு போகலாம் கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும். தொண்டைநோ, சலவருத்தம், நெஞ்சுநோ என்பனவரும். இடமாற்றங்கள் நல்லதல்ல. புத்தகக்கடை, செய்தித்துறை, நகைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி, சனி.*

## மிதுனம்

யுத்தத்தால் பாதிப்படைந்தவர்கள் மீண்டும் பொருளாதார, சமூக உயர்வு பெற உதவுவது அனைவரின் கடமை அல்லவா? வீழ்ந்த தொழில் ஸ்தானத்தில் நியாயமான வருமானம் வர இரவு பகலாக உழைப்பீர்கள். தூரத்துச் செய்திகள் மனப்பதற்றத்தைக் கொடுக்கும். முதுகுவலி, தலைவலி, வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். சட்டத் துறை, குருத்துறை, கமிஷன்துறை போன்ற துறைகளில் உள்ளவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன், சனி.*

## கடகம்

விதி அவரவர் பலனின் முடிவு. அதை எல்லோராலும் எப்பொழுதும் தவிர்க்க முடியும் எனச் சொல்ல முடியாது. அதன் தன்மையை இறைசக்தியால் குறைக்கவோ மாற்றவோ முடியும். தொழில் ஸ்தானத்தில் போட்டி உருவாகும். அரசியல் பேசி அவமானப்படுவீர்கள். இடமாற்றம் நல்லதல்ல. களவு போகலாம். குடும்பத்தினருடன் வாக்குவாதம். எதிரிகள் பதுங்குவர். அழகு சாதனச் செலவுகள் அதிகரிக்கும். வயிறு, நாரி நோ, சலவருத்தம் வரும். சினிமாத்துறை, நகைத்துறை, வங்கித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

## சிங்கம்

தெய்வங்களும் மனித உருவத்தில் நடமாடும் காலம்தான் கலியுகம். தொழில் ஸ்தானத்தில் பதற்ற நிலை உருவாகும். விசாரணைகள் வரும். பெரியவர்கள் உதவிகள் செய்து தருவார்கள். தூரத்துச் செய்திகள் மன உளைச்சலைத் தரும். நாரிநோ, சூட்டுவருத்தங்கள் வாட்டும். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்வது நலம். போக்குவரத்துத்துறை, குருத்துறை, இசைத்துறை, ரி.வி.துறை, விவசாய, வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை போன்ற துறைகளைச் சேர்ந்தோர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள் : புதன், வியாழன், வெள்ளி, சனி.*

## கன்னி

எந்தப் பொருளும் மனித மனங்களுக்கு தூர விலகும் பொழுதுதான் அதன் பெறுமதி தெரியும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் தொடரும். இடமாற்றங்கள் நல்லதல்ல. கொடுக்கல் வாங்கலால் பகை வரும். பொருள்கள் தவறலாம். உங்கள் கருத்துக்களை உடனே தெரிவிக்காதீர்கள். இடுப்புவலி, வாதநோ, கைகால் தாக்கம், கிருமித்தாக்கம் என்பன பாதிக்கும். குருத்துறை, மருந்துத் துறை, நகைத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் விட்டுவிட்டு நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி, சனி.*

## துலாம்

மனிதர்களுடைய வார்த்தைகளால் எத்தனை மனங்கள் குமுறுகின்றன. அதன் விளைவு? தொழில் ஸ்தானத்தில் நன்மை தீமை நடக்கும். இடமாற்றங்கள் கொடுக்கும். புதிய பொறுப்பு வரும். புதிய நண்பர்களால் நன்மைகள் கிடைக்கும். எதிர்ப்புணர்வு தொழிலிடத்தில் இருக்கும். குடும்பத்தினர்களுக்கு நன்மைகள் நடக்கும். பொதுச் சேவையால் குறை கேட்பீர்கள். நாரி நோ, தலைவலி, உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். எண்ணெய்த்துறை, கமிஷன் துறை, குருத்துறை, சட்டத் துறை, வியாபாரிகள் போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி, சனி.*

## விருச்சிகம்

நல்லவர்களை குற்றவாளிகளாக்க வேண்டுமாயின் அதிகாரம், பணம், செல்வாக்கு படைத்தவர்களால் சாட்சி வைத்து நிரூபித்து தண்டனை வாங்கிக் கொடுக்கமுடியும். ஆனால் கொதித்து எழும் மனங்களை சாந்திப்படுத்த எவரால்தான் முடியும்? தொழில்ஸ்தானத்தில் பதற்றநிலை தோன்றும். இடமாற்றம் வேண்டாம். பொருள்கள் களவு போகலாம். கவனமாக இருக்கவும். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். குடும்பத்தில் சிறப்புவரும் தொண்டை நாரி நோ வரும். விவசாயத்துறை, மருந்து, இரும்பு வியாபாரத்துறையினர்கள் நன்மை அடைவீர்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## தனுசு

ஆவணம், சாட்சிகளால் சட்டப்படி எதையும் நிரூபித்துத் தண்டனை வாங்கிக் கொடுக்கமுடியும். ஆதாரமற்ற உண்மைகள் மறைந்து போகின்றதா? தொழில் ஸ்தானத்தில் பொருள்களில் கவனமாக இருக்கவும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புணர்வு வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தூரத்துச் செய்திகள் வரும். சாப்பாட்டால் உடல்நிலை சுகயீனம் வரலாம். வயிறு, கால் நோ, உஷ்ண பீடைகள் வரும். சட்டத் துறை, குருத்துறை, மரம், இரும்புப் பொருள்கள் விற்பனை செய்பவர்கள் போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## மகரம்

பொருத்தமில்லாத வீடு, மனைவி இடைநடுவில் விலகிவிடலாம். பொருத்தமில்லாதவற்றைக்கூட திறமையானவர்கள் தம்வசப்படுத்துவர். அதனால் நற்பலன் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் கருத்து மோதல்கள் வரும். இனஜனக் கொண்டாட்டம் கிடைக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். மாணவர்களுக்கு மந்தநிலை தோன்றும். நரம்பு, வயிறு, நாரி போன்ற இடங்களில் நோ வரும். வியாபாரத்துறை, செய்தித்துறை, எண்ணெய்த்துறை, சட்டத்துறை

# மகாதேவா ஜோதிடம்

போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன், சனி.*

## கும்பம்

கயவர்கள் ,பொல்லாதவர்களுக்கு தண்டனை கொடுப்பதில் பாவமில்லை. தொழில்ஸ்தானத்தில் கடுமையாக நடப்பீர்கள். தீய ஆலோசனைகள் தீமையையே தரும். மனச்சுத்தத்துடன் செயற்படுங்கள். பிறரை மன்னித்து விடுங்கள். எதிர்ப்புணர்வின் பங்களிப்பு எமது செயற்பாட்டைப் பொறுத்தே கூடிக்குறையும். பட்டும் படாமலும் நடப்பதே வாழ்க்கை. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் நன்மைகள் நடக்கும். மூட்டுவலி, கைகால் வருத்தம், நெஞ்சு படபடப்பு, மறதி என்பன வரும். சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, சந்தைத் துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், சனி.*

## மீனம்

சமாதானப் புறா பறக்க வேண்டுமாயின் இலங்கை மாதாவின் குழந்தைகள் நாம் ஒவ்வொருவரும் என்ற உணர்வு வரவேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் வருமான அதிகரிப்பு, பெரியவர்கள் உதவிகள், இடமாற்றங்கள் என்பன நடக்கும். பொருள் களவு நடக்கலாம். இனஜன உதவிகள் கிடைக்கும். சளி பிடிக்கும். இடுப்பு வருத்தம், பாதத்தில் வருத்தம், சூட்டுவருத்தங்கள் வரலாம். குருத்துறை, மருந்துத்துறை, கைத்தொழில்துறை, வியாபாரத்துறை நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், சனி.* ★

## ஒரு வருடத்தில் 1,600 பேருக்கு மூக்குக் கண்ணாடி

வடமராட்சி,மே4

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஒரு வருடகாலத்தில் ஆயிரத்து 600 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

இவற்றை இலவசமாக வழங்குவதற்கு வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையுடன் பொது நிறுவனங்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் வெளிநாட்டுவாசிகள் நிதி உதவிகளை வழங்கியிருந்தனர். (க-173)

## லொறி சாரதிகளுக்கு அசௌகரியம்

வடமராட்சி,மே4

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்றி இறக்கும் பாரவூர்திகள் (லொறிகள்) நிறுத்தப்படும் புதிய இடத்தில் தண்ணீர், மலசல கூட வசதிகள் இல்லாமையினால் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாரவூர்த்திகளை நிறுத்துவதற்கென யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினால் பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் தெரிவுசெய்யப்பட்டிருந்த காணியில் ஒரு கிணறும் மலசலகூடமும் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதாக லொறிச்சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-173)

## பாடசாலை முகாமையாளர் பதவி வெற்றிடம்

வலி.தெற்கு,மே4

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய கல்வி நிலையத்தில் முகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. இப்பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறைந்தது ஐந்து வருடத்துக்குக் குறையாத ஆசிரிய கற்பித்தல் அனுபவமுடைய, 40 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மெற்றிக்குடன் கூடிய கல்வி டிப்ளோமா பட்டதாரி கல்வித் தகைமை உடையவர்களே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

பொருத்தமானவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (க-152)

## கிணறு புனரமைக்க உதவி

தென்மராட்சி,மே4

சாவகச்சேரி நகர மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்க எல்லைப்பரப்பில் உள்ள குடும்பத்தலைவனை இழந்த எட்டுப் பெண்களுக்கு கிணறு புனரமைக்க தலா 5ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. (க-117)


**கண்ணாடி இழைநார் படகு உரிமையாளருக்கு**

**படகு நிர்மாணித்தலும், திருத்தலும்**

**எமது நிறுவனத்தினால் தகுதிவாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் மூலம் மேற்படி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தேவையானவர்கள் எமது நிறுவனத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.**

முகாமையாளர்,
*குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்.*
*தொலைபேசி - 3083* (C/21973)


# நீங்காத நினைவில்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்** | **14ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்**



அமரர்
**கந்தன் மார்க்கண்டு**



திருமதி
**மார்க்கண்டு நல்லம்மா**

15-07-1937 ← பாசப்பிணைப்பு → 30-06-1944
04-04-2002 ← பந்த அறுப்பு → 18-12-1988

அன்னையாய் தந்தையாய்
ஆசையுடன் எமைப் பெற்று
இன்பமுடன் எமையெல்லாம் வாழவைத்து
ஈருடலும் ஓருடலாய் கலந்து
உங்களை நோகாமல்
ஊக்கமுடன் எமை எல்லாம் கல்வி பயில வைத்து
என்றும் எம் உள்ளங்களை நோகாமல்
ஏக்கமுடன் நாமிருக்க
ஐயமின்றி நாம் வாழ
ஒன்றுகூடி நாம் இங்கு
ஓயாமல் தேடுகின்றோம்.

*என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

எமது தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு உற்ற துணை புரிந்தோரையும் எமக்கு ஆறுதல் தந்தோரையும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்று (04-05-2002) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தனிப்பட்ட அழைப்பு இல்லை

பாலாவி வடக்கு,
கொடிகாமம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

(3398)

# தமிழக சட்டப் பேரவைத் தீர்மானம் ஈழத்தமிழருக்கு இரண்டகம் புரிகிறது

## சான்றோர் பேரவை கண்டனம்

கொழும்பு,மே4

தலைவர் பிரபாகரனைக் கைது செய்யக் கோரும் தமிழக சட்டசபைத் தீர்மான நகலை எரிக்கும் போராட்டத்திற்கு தமிழகத்தில் ஆதரவு பெருகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைவர் பிரபாகரனுக்கு எதிரான தமிழக சட்டசபைத் தீர்மான நகலை மாநிலம் முழுதும் எரிக்கும் போராட்டத்தை பழ.நெடுமாறன் அறிவித்திருந்தார்.

இப்போராட்டத்திற்கு தமிழ் சான்றோர் பேரவை ஆதரவு தெரிவித்துள்ளது.

சான்றோர் பேரவையின் நிறுவுநர் நா.அருணாசலம், ஒருங்கிணைப்பாளர் தமிழண்ணல், இணை ஒருங்கிணைப்பாளர்கள் பெரியார்தாசன். அருகோ ஆகியோர் போராட்டத்தில் பேரவை பங்கு கொள்கிறது என்று அறிக்கை வெளியிட்டுள்ளனர். சட்டப பேரவைத் தீர்மானம் ஈழத்தமிழருக்கு இரண்டகம் செய்கிறது என்று அவர்கள் அறிக்கையில் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்கா உட்பட உலக நாடுகள் எல்லாம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுவதை உளமார வரவேற்கும் இத்தருணத்தில் இலங்கை அரசாங்கமே அத்தகையதொரு சமாதானத தீர்வைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் செய்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கவுள்ள சந்தர்ப்பத்தில் -

ஈழத் தமிழர்களுக்கு எந்த வகையிலும் கடமைப்பட்டிராத எங்கோ உள்ள நோர்வே நாடு மனிதாபிமானத்தால் உந்தப்பட்டு இதற்கான உடன்பாடு நடவடிக்கைகளைச் செய்து வருகையில் -

இலங்கைத் தமிழர்களுடன் தொப்புள்கொடி உறவுள்ள தமிழ் நாட்டின் அரசாங்கம், உபகாரம் செய்வதற்குப் பதிலாக உபத்திரவம் செய்யும் வகையில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டிருப்பதானது -

ஈழ இலங்கை மக்களின் சமாதானத் தீர்வுக்கு எதிரானதும் ஈழத் தமிழர் படுகொலையை நியாயப்படுத்துவதும் உலகத் தமிழர்களின் நலனுக்குக் கேடு விளைவிப்பதும் ஆகும். ஈழத்தமிழினத்துக்கு இரண்டகம் செய்யும் அத்தீர்மானத்தின் நகலை எரிக்கும் போராட்டத்தை நடத்தப்போவதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் அறிவித்துள்ளதை சான்றோர் பேரவை பாராட்டி வரவேற்கிறது.

உலகத் தமிழர்களின் மனச்சானறை வெளிப்படுத்தும் மானத்தை நிலைநாட்டும் இந்த அறப்போரில் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் சான்றோர் பேரவையினரும் தமிழ் உணர்வாளர்களும் தமிழ் மக்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று சான்றோர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

- இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## வர்த்தக சம்மேளன தலைவரின் வருகை

யாழ்ப்பாணம்,மே4

தென்பகுதி வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் தேசமாணி லலித் கொத்தலாவல எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் சிலிங்கோ குறுாபில் அங்கம் வகிக்கும் செலான் வங்கி, சிலிங்கோ ரவல்ஸ் உட்பட பல நிறுவனங்களின் கிளைகளை அவர் திறந்துவைக்கவிருக்கின்றார். (உ-3)

## மீண்டும் தென்மராட்சியில் வலய அலுவலகம்

பருத்தித்துறை,மே4

தற்போது வடமராட்சியில் இயங்கி வரும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் எதிர்வரும் 15ஆம திகதி மீசாலைக்கு இடம்மாறவிருக்கின்றது.

மீசாலைப் பகுதியில் உள்ள ஒரு தனியார் கட்டடத்துக்கு இந்த அலுவலகம் இடம்மாறுகின்றது.

வலயக் கல்விப பணிப்பாளர் எஸ். செல்வராசா தலைமையில் நேற்று மீசாலைக்கு சென்ற குழு அங்கு நிலைமைகளை ஆராய்ந்தது. (உ-118)

## பனஞ்சாராய போத்தல்களுக்கு புதிய லேபல்

வடமராட்சி,மே4

இலங்கை பனை அபிவிருத்திச் சபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் திக்கம் பனஞ்சாராய வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயப் போத்தல்களுக்கு புதிய லேபல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஊதா நிறத்தில் பனை மரத்தின் படம் கொண்டதாக முற்றுமுழுக்க பச்சை நிறத்தில் இப்புதிய லேபல் அச்சிடப்பட்டுள்ளது. (க-173)

# சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளின் விவரம் சேகரிக்கும் பணி ஆரம்பம்

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விவரங்களை சேகரிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

களுத்துறை, மட்டக்களப்பு, பூஸா, கண்டி, பதுளை, வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவே இந்த விவரம் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் ஆலோசனையின் பேரில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் மூவர் கொண்ட குழுவொன்று இப்பணியில் ஈடுபட்டுள்ளது. (க-8)

## கொழும்பு ஹைட்பார்க்கில்

# தொழிற்சங்கங்கள் நடத்திய மேதினக் கூட்டத்தில் கைகலப்பு

கொழும்பு ஹைட்பார்க்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தொழிற்சங்க கூட்டு முன்னணியின் மேதினக் கூட்டத்தில் இரண்டு கோஷ்டியினருக்கிடையே கைகலப்பு மூண்டது இதனால் கூட்டத்தில் அமைதியற்ற நிலை உருவானது.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மேடைக்கு முன்னால் இந்த மோதல் நடைபெற்றது. இதனால் கூடடம் சிறிது நேரம் தடைப்பட்டது.

அந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் அடிதடியில் இறங்கிய இரண்டு பிரிவினரையும் அங்கிருந்து வெளியேற்றினர்.

இதற்கிடையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவருமான வாசுதேவ நாணயக்காரவுக்கு இக்கூட்டத்தில் உரையாற்ற அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் அவர் மைதானத்திலேயே அமர்ந்துவிட்டார்.

தொழிற்சங்கங்கள் மட்டும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அரசியல் கட்சித் தலைவர் என்ற முறையில் வாசுதேவ உரையாற்ற இடமளிக்கபபடவில்லை என்று கூட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ)

# பனஞ்சாராயத்தில் நீரிழிவு எதிர்ப்புசக்தி!

## ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,மே4

திக்கம் வடிசாலை பனங்கள்ளில் இருந்து தயாரிக்கப்படும் பனஞ்சாராயம் இயற்கையானது. நீரிழிவு உட்பட பல நோய்களுக்கான எதிர்ப்புச் சக்திகள் கொண்டது.

வயம்ப பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம இது தெரியவந்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ.சிவபாதம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திக்கம் வடிசாலை உற்பத்தி செயயும் பனஞ்சாராயத்தை சர்வதேச தரமமிக்கதாக்குவதற்காக அச்சாராயத்தின் தரம் குறித்து ஆய்வு செய்வதறகாக வயம்ப பல்கலைக்கழகத்துடன உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டோம்.

"பனஞ்சாராயம் இயற்கையான சாராயம். நீரிழிவு உட்பட மற்றும் பல நோய்களுக்குரிய எதிர்ப்புச் சக்தியை கொண்டுள்ளது என்பது அந்த ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது"

இப்படி அவர் கூறினார். (ஐ-3)

# சிறுவர்கள் மாநாட்டுக்காக ஜனாதிபதி அமெ. விஜயம்

கொழும்பு,மே4

உலகத் தலைவர்களின் தலைமையில் சிறுவர்கள் மாநாடு ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நியூயோர்க் நகரில் ஐ.நா.தலைமையகத்தில் நடைபெறும்.

இலங்கையின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாநாட்டில் கலந்துகொள்வார்.

70 நாடுகளின் தலைவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் 1000 பிரதிநிதிகளும் சிறுவர்கள், இளைஞர்கள் சார்பில் 100 பிரதிநிதிகளும் மாநாட்டில் பங்குபற்றுவர்.

சிறுவர்கள் எதிர்நோக்கும் வறுமை, வன்முறைகள், சுரண்டல், பாலியல் துஷ்பிரயோகம் உட்பட பல பிரச்சினைகள் குறித்து உலகத் தலைவர்கள் இம்மாநாட்டில் கவனம் செலுத்துவர். (க)

## பதவி உயர்வில் புறக்கணிப்பு

# 13 பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் செய்த மனுவுக்கு நீதிமன்று சாதகமான தீர்ப்பு

கொழும்பு,மே4

பொலீஸ் இன்பெக்டர்கள் 13பேர் பதவி உயர்வு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் விசாரணையில் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தாம் தேர்வுப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தபோதும் பதவி உயர்வு வழங்காமல் இருப்பதை எதிர்த்து தாக்கல் செய்த மனு ஒன்றை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த இன்ஸ்பெக்டர்களுக்கு உடனடியாக உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு வழங்குமாறு தீர்ப்பளித்துள்ளது. (க-8)

# சர்வதேச ஒத்துழைப்புடன் பிரிவினையின்றித் தீர்வு!

## மேதினக் கூட்டத்தில் ரணில் வலியுறுத்து

கொழும்பு,மே4

சர்வதேச ஒத்துழைப்புடன் பேச்சு நடத்தி நாட்டைப் பிரிக்காத சுயாட்சி ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அதன் மூலமே இந்த நாட்டைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின விழாவில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியும் தொழில் அமைச்சும் ஏற்பாடு செய்திருந்த இம் மேதின விழா கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

பிரதமர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த மேதின விழாவை நம்பிக்கையற்ற ஒரு சூழ்நிலையில் நடத்தினோம். அச்சமயம் யுத்தத்தை நிறுத்தப் பொருளாதாரச் சீரழிவில் இருந்து இந்த நாட்டை எப்படிக் காப்பாற்றுவது என்ற கேள்விக்கு விடை தெரியாமல் இருந்தது. ஆனால் இந்த மேதின விழா புதிய நம்பிக்கையை எமக்குத் தந்திருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டதன் மூலம் யுத்தம் நிறுத்தப்பட்டுச் சகல இன மக்களும் அமைதியாக வாழும் ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த அமைதிச் சூழ்நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காகப் பல பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். என்றாலும் நாம் எமது கொள்கையிலிருந்து நழுவாமல் புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் முன்னேறிச் செல்வோம். சமாதானத்தைப் பெற்று சகல இன மக்களும் நிம்மதியுடனும் சுபீட்சத்துடனும் வாழ வழி செய்வோம். என இத்தினத்தில் உறுதி செய்து கொள்கிறோம் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையில் -

சகல அரசியல் கட்சிகளும் தங்கள் வேற்றுமைகளைக் களைந்து இந்த நாட்டில் சமாதானம் உருவாக ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஒ)

# ஐ.தே.கவுடன் தேசிய அரசு குறித்து பேசுவோரைத் தோலுரிக்கவேண்டும்

## நாட்டைத் துண்டாடும் சமாதானத்தால் பயனில்லை என்கிறார் ஜனாதிபதி

அப்புத்தளாவளை,மே.4

நாட்டைக் காட்டிக்கொடுத்து, நாட்டை வெளிநாடொன்றுக்கு அடகு வைக்க யாருக்கும் உரிமையில்லை. நாட்டைத் துண்டு, துண்டுகளாக உடைத்து ஒரு துண்டை பிரபாகரனுக்கு வழங்க ஏற்படுத்தும் சமாதானத்தால் பயனில்லை. கௌரவமான சமாதானமே எமக்குத் தேவை. ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய அரசை உருவாக்க பேசுவோர் இருப்பார்களேயானால் அவர்களைத் தோலுரிக்க வேண்டும்.

அப்புத்தளையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு சாடினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமக்கு சமாதானத்தில் விருப்பம். சிறுபான்மையினருக்கு சகல உரிமைகளும் வழங்கப்படவேண்டும். அதே வேளை சிங்கள மக்களின் உரிமைகளைக் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை.

அதிகாரத்துக்கு வர பிரபாகரன் உதவி செய்திருந்தால் தனிப்பட்ட முறையில் உதவி செய்யவேண்டும். நாட்டைக் காட்டிக் கொடுத்து அந்த உதவியைச் செய்ய அனுமதிக்கமுடியாது. நாட்டில் ஒரு கட்சி சர்வாதிகார அரசை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவும் எஸ். பி.திஸாநாயக்காவும் தினமும் ஒன்றுகூடி சர்வாதிகார முறையை ஏற்படுத்துவது குறித்து பேசி வருகின்றனர்.

எமது தரப்பில் உள்ள சிலருக்கு கோடிக் கணக்கில் பணம் கொடுத்து தமது தரப்புக்கு இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு பல பதவிகள் வழங்க முயற்சிக்கின்றார்கள். சபாநாயகர் பதவி வழங்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. நான் ஜனாதிபதியாக உள்ளபோதிலும் பிரதமர் ரணில் எனக்கோ நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினருக்கோ அறிவிக்காமல் பிரபாகரனுடன் போலி உடன்படிக்கையை ஏற்படுத்தி நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர முற்படுகிறார் - என்றார்.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, அனுரா பண்டாரநாயக்க, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மத்தும பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க உரையாற்றுகையில்:-

அரசு விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேவேளை இன்னும் நான்கு வருடங்களுக்கு ஜனாதிபதியை ஆட்சியிலிருந்து எவராலும் விலக்க முடியாது என்று கூறினார். (க)

## கை, கால்கள் கட்டப்பட்டு

# கடலில் வீசப்பட்ட விமானப்படை அதிகாரி மீனவர்களால் உயிருடன் மீட்கப்பட்டார்!

கொழும்பு,மே4

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நீர்கொழும்புக் கடலில் வீசப்பட்ட விமானப்படை அதிகாரி ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணிபுரியும் கண்டியைச் சேர்ந்த ஆனந்தகீர்த்தி ரட்ணபண்டாரட்நாயக்க (வயது 26) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

கடலில் மிதந்த இவரை மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களே காப்பாற்றினர்.

கை,கால்களைக் கட்டி இவரைக் கடலில் வீசியவர்களைத் தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர்.(க-3-8)

# கடற்படையினரின் செயலைக் கண்டித்து மூதூர் கிழக்கில் இன்று பேரணி!

மூதூர்,மே4

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி பொதுமக்கள் வாழும் பகுதியில் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்த கடற்படையினரின் செயலைக் கண்டித்து இன்று மக்கள் பேரணி ஒன்று மூதூர் கிழக்கில் நடைபெறும்.

கடந்த 29ஆம் திகதி இரவு நிலாவெளியில் கடற்படையினர் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் கோபாலபுரத்தைச் சேர்ந்த 48வயதான பேச்சிமுத்து மாரிமுத்து என்பவரும் மூதூர் கிழக்கு சந்தோஷபுரத்தைச் சேர்ந்த 19வயது சுபாஜினி சுந்தரலிங்கம் என்ற யுவதியும் படுகாயம் அடைந்தது தெரிந்ததே.

படையினரின் இந்த அத்துமீறல்களைக் கண்டித்து மூதூர் கிழக்கில் இன்று பூரண [illegible] நடத்தப்படும். கட்டைபறிச்சான் புலானந்த வித்தியாலயத்தில் இருந்தும், சம்பூர், பாட்டாளிபுரம் ஆகிய இடங்களில் இருந்தும் காலை 9மணிக்குப் புறப்படும் கண்டனப் பேரணிகள் 10.30 மணிக்கு நாவலடியைச் சென்றடையும்.

அங்கு படையினரின் அத்துமீறல்களைக் கண்டித்து மூதூர் கிழக்கு மக்களால் மகஜர் ஒன்று கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படும். இதன் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான், பிரதமர், ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படும். (ஐ)

# திருமலை சமாதான அமைப்பு கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

திருகோணமலை,மே4

திருகோணமலைக்கு நேற்று வருகைதந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன் புருகோவிட்டிடம் திருமலை மாவட்ட சமாதான அமைப்பு, மகஜர் ஒன்றைக கையளித்தது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு எதிராகக் கொண்டுவந்த தீர்மானத்தைக் கண்டித்து நடைபெற்ற ஊர்வலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து மகஜரில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நிலாவெளியில் இரண்டு பெண்கள் கடற்படையினரால் சுட்டுக் காயப்படுத்தப்பட்ட சம்பவமும் மகஜரில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அரசின் சமாதான முயற்சிக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் பொலீஸாரினதும் கடற்படையினரினதும் மறைமுகப் பிரயத்தனங்களையே இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, மாவட்ட பொலீஸ், முப்படைத் தலைவர்களின கூட்டத்தைக் கூட்டி சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்காதிருக்க பிரதமர், அவர்களுக்கு அறிவுரை கூற ஆலோசனை தெரிவிக்கவேண்டும் என்று மகஜரில் கோரப்பட்டிருக்கிறது. (ஐ)

## இராணுவ அதிகாரிகள் - புலிகள் பேச்சில் இணக்கம்

# வவுனியாவில் இருந்து வடக்கே செல்லும் பயணிகளுக்கு ஓர் இடத்தில் மட்டும் பதிவு

## சோதனைக்கு அதிக எண்ணிக்கையில் பொலீஸார்

வவுனியா,மே4

வவுனியாவிலிருந்து வன்னி செல்வோரை மூன்று இராணுவச் சாவடிகளில் பதிவுசெய்யும்முறை எதிர்காலத்தில் நீக்கப்படும். ஓர் இடத்தில் மட்டுமே பதிவு மேற்கொள்ளப்படும். சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருக்குப் பதிலாக அதிகளவு பொலீஸாரைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேளவன் மற்றும் எழிலன் ஆகியோர் இராணுவ, பொலீஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய தன் பயனாக இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் மாலை வன்னி இராணுவ தலைமையகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் மேஜர் ஜெனரல் சூல செனவிரட்ன, மேஜர் டி அல்விஸ், மேஜர் சந்திரவன்ச ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா பிரதேசத்தின் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் வவுனியாவிலிருந்து வன்னிக்குச் செல்வோர் தாண்டிக்குளம், ஓமந்தை, விளக்குவைத்தகுளம் ஆகிய மூன்று சோதனைச்சாவடிகளில் பதிவுசெய்யப்படுவது தொடர்பாகவும் புலி உறுப்பினர்கள் விசனம் தெரிவித்தனர். பயணிகளுடன் இராணுவத்தரப்பு கடுமையாக நடந்துகொள்கின்றது என்றும் அவர்கள் கூறினர்.

மன்னார் வீதி உட்பட வவுனியாவில் பல புதிய காவல் அரண்கள் அமைப்பது தொடர்பாகக் குறிப்பிட்டபோது, புதிய கவலரண்களை அகற்றிக்கொள்வதாக இராணுவத்தரப்புத் தெரிவித்தது.

இதன்பின்னர் வவுனியா பொலீஸ் தலைமையகத்தில் பிரதிப் பொலீஸ்மா அதிபர் எம்.என்.தர்மரட்ன, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வில்பிரட் மஹநாயக்க ஆகியோரையும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சந்தித்தனர்.

வவுனியாப் பிரதேசத்தில் ஒழுக்கச் சீர்கேடுகள் தொடர்பாக தமக்கு அதிகளவு முறைப்பாடுகள் கிடைப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தபோது இது தொடர்பாகத் தம்மிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுப்பதாக பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## முன்னர் விண்ணப்பித்து விட்டு

# வன்னிக்குச் சென்றவர்கள் தங்களின் அடையாள அட்டைகளைப் பெறலாம்

கடந்த 1995ஆம் ஆண்டுப் பகுதியில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் வசித்து வருபவர்கள் தமது அடையாள அட்டைகளை இப்பொழுது யாழ். செயலகத்தில் கையேற்று வருகின்றனர்.

திடீரென ஏற்பட்ட இடம்பெயர்வை அடுத்து வன்னிப் பகுதிக்குச் சென்ற மக்கள் 6வருடங்களின் பின்னர் இங்கு வரத்தொடங்கியுள்ளதால் இந்த அறிவிப்பை யாழ்.செயலகத்தின் அடையாள அட்டைத் திணைக்களத்தினர் விடுத்துள்ளனர்.

பிரதேச செயலகங்களுக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு விண்ணப்பதாரிகளால் கையேற்கப்படாத அடையாள அட்டைகள் யாவும் திரும்பவும் யாழ்.செயலகத்தில் உள்ள அடையாள அட்டைத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

சுமார் 400 பேரின் அடையாள அட்டைகள் தம்மிடம் உள்ளதாகவும் உரியவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அடையாள அட்டைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)


## அரசாங்க அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### 2002ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ். மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவிரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று 2002. 05. 29ஆம திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு *அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்* எனும் விலாசமிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2002 எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

01. கணனி, நிழற்படப் பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ், மோட்டார் வாகனங்கள் ஆகியவையும் அவற்றின் உதிரிப்பாகங்களை வழங்குதலும், சேவிஸ் செய்தலும், அவற்றினைத் திருத்துதலும்.
02. காகிதாதிகள், எழுதுபொருள்கள் முதலியன.
03. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கில்தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோறின் முதலியன)
04. மரத்தளபாடங்கள்.
05. உருக்குத் தளபாடங்கள்.
06. கட்டட, தளபாட திருத்தம் செய்வதும் அதற்குரிய பொருள்களும்.
07. இரும்புப் பொருள்களும் மற்றும் மூலப்பொருள்களும்.
08. பீங்கான் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள்.
09. மின் உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்.
10. இறப்பர் முத்திரைகள்.
11. சீருடைத் துணிகள் மற்றும் துணிகள்.
12. மின் பிறப்பாக்கி, மின்மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும், திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

க.சண்முகநாதன்,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மாவட்டச் -செயலகம்,
*யாழ்ப்பாண மாவட்டம்.* (சி-22012)


## அமைச்சரின் விஜயம் ஒத்திவைப்பு

செங்கலடி,மே4

நீர்ப்பாசன, இயற்கைவள அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மட்டக்களப்பு மாவட்ட விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரின் விஜயம் இன்று நடைபெறவிருந்தது. (ஐ)

## வட்டுக்கோட்டையில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே4

புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் ஆக்கிய 'அருள்மிகு விசுவேசர் புராணம்' வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் அ.அரியரத்தினம் தலைமையில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை சிவத்திரு.கா.சிவமூர்த்திக் குருக்களும் வாழ்த்துரையை புலவர்மணி பண்டிதர் அ.ஆறுமுகமும், பாராட்டுரையை முன்னாள் பிரதேச செயலர் கா.சந்திரராசா, சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ராஜினி கந்தசாமி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் அறிமுகவுரையை பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்தவுள்ளார். (க-10)

## திருகோணமலையில்

# மீனவர்களின் வசதி கருதி தொலைத்தொடர்பு சேவை

திருகோணமலை,மே4

கடற்றொழில் நீரியல் சமுர்த்தி வள அமைச்சர் மஹிந்த விஜயசேகர நேற்று திருகோணமலைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்.

திருகோணமலை என்.சி. வீதியில் உள்ள கடற்றொழில் கூட்டுத்தாபன அலுவலகத்தில் மீனர்வர்களால் அமைச்சர் வரவேற்கப்பட்டார்.

அங்கு மீனவர்களின் பிரச்சினையைக் கேட்டறிந்த அவர், அவர்கள் மத்தியில் உரையாற்றும்போது மீனவர்களின் குறைகளைத் தீர்க்க முன்னின்று உழைப்பேன் என்றார்.

மீனவ்கள் நன்மைகருதி வானொலி தொலைத்தொடர்புச் சேவை ஒன்றை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

இங்குள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மீனவர்களின் தேவைகளை நிறைவேற்ற ஆவன செய்துள்ளேன். மீன்பிடிப்படகுகள், எரிபொருள் என்பன மீன்பிடி சமுர்த்தி வளம் மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறேன் என்றும் அமைச்சர் சொன்னார். (ஐ)

# மின்னொளியில் கரப்பந்தாட்டம் இன்று நல்லூரில் நடக்கும்

வலி.வடக்கு,மே4

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான இறுதி மற்றும் மூன்றாம் இடத்திற்கான இந்தப் போட்டிகள் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகில் இடம் பெறும்.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கி முகாமையாளர் க.விக்கினராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருணகிரிராசா, யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஜே.எப்.ஏ.ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி வி.க. எதிர் ஆவரங்கால் இந்து வி.க.

**மூன்றாம் இடம்**

கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம்.

**பெண்கள் பிரிவு**

இறுதிப்போட்டி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் எதிர் கே.கே.எஸ்.ஐக்கிய விளையாட்டுக்கழகம். (க-86)

## நீர் விநியோகம் துண்டிப்பு

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள நீர்க் குழாய்களில் திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் யாழ். நகரில் உள்ள பிரதான நீர்த்தாங்கிக்கு மேற்குப் பிரதேசத்தில் இன்றும் நாளையும் நீர் விநியோகம் தடைபட்டிருக்கும் என்று மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-3)


## தவறிவிட்டது!

**வேடன் கிணத்தடி, குப்பிளான் தெற்கு, ஏழாலையில் வசிக்கும் இராசையா சிவலிங்கம் என்பவருடைய ஒரு தொகைப் பணம் மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரப் புத்தகம் மற்றும் ஆவணங்கள், பொருள்கள் அடங்கிய பை ஒன்று 02.05.2002 வியாழக்கிழமை கொடிகாமத்திற்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.** (C/22014)



## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா தசரதன்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தசரதன் நேற்று (03.05.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் தசரதனின் (ஓய்வுபெற்ற ,லிகிதர், யாழ். செயலகம்) அன்பு மனைவியும் அமரர்களான செல்லம்மா, அப்புத்துரை, செல்லையா ஆகியோரின் சகோதரியும் திருமதி த.ஜெகதீஸ்வரி, திருமதி ம.ஜெகதாம்பாள், திருமதி நா.ஜெகமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் S.K.தங்கவடிவேல் (விலை மதிப்புக் காரியாலயம்), மா.மகேந்திரன் (இத்தாலி), S.நாகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சுதந்தரி (பகுதிநேர விரிவுரையாளர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), நாரணி (யாழ். மருத்துவ பீடம்), அரவிந்தன் (யாழ்.மருத்துவ பீடம்), பிரசாந்தி, சுபாணன், கௌதமி, பிரணவி, சாகித்தியன், சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2002) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.K.தங்கவடிவேல்
*(மருமகன்)*

*"மணிபல்லவம்"*
*பழைய வீதி, கோப்பாய்.* (3437)

# எமக்கு எப்போது விடிவு கிடைக்கும்? குருநகர் மக்களின் அங்கலாய்ப்பு!

## உடன்படிக்கை கைச்சாத்தாகியும் மீனவருக்கு இல்லையே விமோசனம்!!

செய்திக் கட்டுரை

குருநகர் செய்தியாளர்

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை தற்போது நடைமுறையில் உள்ள போதிலும் குருநகரில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளைத் தளர்த்தாத காரணத்தால் குருநகர் மக்களும் குடாக்கடலில் மீன்பிடித் தொழில் செய்துவரும் குருநகர் மீனவர்களும் தமது நாளாந்த வாழ்க்கையில் தொடர்ந்து மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

குருநகர் கடலுக்கு அருகில் அமைந்துள்ள குருநகர் புதிய கடற்கரை வீதி மக்கள் பாவனைக்குத் தொடர்ந்து தடைசெய்யப்பட்ட பகுதியாகவே உள்ளது. 1995 ஒக்ரோபரில் இடம்பெயர்ந்து சென்ற குருநகர் மக்கள் 1996 ஏப்ரலில் தமது குடியிருப்புக்களில் குடியேறிய நாள் தொடக்கம் இவ்வீதி இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

குருநகர் 2ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயத்தில் இருந்து கிழக்குப் புறமாக குருநகர் இறங்குதுறை வரையுள்ள பகுதிவரை இவ்வீதியின் அருகில் அமைந்துள்ள சுமார் 200 வீடுகளில் வசித்துவந்த குடியிருப்பாளர்கள் இவ்வீடுகளில் குடியிருக்க முடியாத வகையில் 'இராணுவ வேலி' அமைக்கப்பட்டுள்ளது.

### குடியமர அனுமதியில்லை

இவர்கள் தம்மைத் தமது வீடுகளில் குடியமர அனுமதிக்குமாறு கோரி இராணுவத்தினரிடம் பலதடவைகள் மகஜர்களைச் சமர்ப்பித்த போதிலும் அவர்கள் குடியேற இராணுவம் இன்றுவரை அனுமதி வழங்கவில்லை.

இம்மக்கள் தமது உறவினர்களது வீடுகளிலும் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்ற மக்களது வீடுகளிலும் தங்கி வசித்து வருகின்றனர். ஆனால், அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதை திறக்கப்பட்டு வன்னிக்கான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ள இவ்வீடுகளின் உரிமையாளர்கள் இங்கு வரும்போது இத்தகையோரது வீடுகளில் தங்கியுள்ளவர்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

குருநகர் 2ஆம் குறுக்கு வீதி தொடக்கம் குருநகர் பற்றிக்ஸ் வீதி வரை குருநகர் புதிய கடற்கரைவீதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள 'மறைப்பு' இதுவரை அகற்றப்படவில்லை. இதனால் குருநகர் மக்கள் கடலைக்கூட பார்க்க முடியாத நிலையிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

### ஒரு பாதையூடாகவே மீனவர் செல்ல அனுமதி

குடாக்கடலில் தொழில் செய்து வரும் குருநகர் மீனவர்கள் ஒரு பாதையூடாகவே கடலுக்குச் சென்று அப்பாதையூடாகவே கடலில் இருந்து மீண்டும் கரைக்குத் திரும்பிவர இராணுவத்தினரால் அனுமதிக்கப்படுகிறார்கள்.

குருநகர் புதிய பூங்கா வீதியில் அமைந்துள்ள இராணுவச் சோதனைச் சாவடியில், மீனவர்கள் தமது அடையாள அட்டையை ஒப்படைத்து தமக்குரிய கடல் பாஸினை இராணுவத்திடமிருந்து பெற்றபின்னரே 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள குருநகர் இறங்குதுறை நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

குடாக்கடலில் மீன் பிடித்துவரும் மீனவர்களுக்குத் தமது வள்ளங்களில் வெளி இணைப்பு இயந்திரம் பூட்டி தொழில் செய்யும் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை. மீனவர்கள் தமது வள்ளங்களில் பாய் போட்டும், கம்புகளினால் வலித்துமே தொழில் செய்து வருகிறார்கள்.

குடாக்கடலில் ஆழ்கடல் தொழில்களான டிஸ்கோ வலை, தங்கூசி வலை, கடலட்டை பிடித்தல், அடி வலை, நெடியபட்டி வலை ஆகிய தொழில்களையும் மீனவர்கள் தற்போது செய்து வருகிறார்கள். இத்தொழில்களைச் சிறப்பாகச் செய்வதற்கு வெளி இணைப்பு இயந்திரங்கள், இயந்திரப் படகுகள் என்பன அவசியம் தேவை. ஆனால், இவைகளுக்கான அனுமதி அரசினால் இதுவரை வழங்கப்படவில்லை. இதற்கான அனுமதியை வழங்குமாறு மீனவர் சங்கங்கள், வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவை அரசையும் இராணுவ உயரதிகாரிகளையும் கோரி மகஜர்களை பல தடவைகள் வழங்கியபோதிலும் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் காற்றுள்ளபோது பாய் மூலம் வள்ளங்களில் தொழில் செய்யும் மீனவர்கள் காற்றுக் குறைவான நேரத்தில் கம்புகள் மூலம் வள்ளத்தை அதிக தூரம் வலித்துச் சென்றே தொழில் செய்து கரைக்குத் திரும்பி வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்னும் நிலவுகின்றது.

அதிகாலை 3 மணிக்கு தொழில் செய்ய அனுமதிக்கப்படும். மீனவர்கள் அன்று பிற்பகல் 3 மணிக்கு கரைக்குத் திரும்பவேண்டும் என்ற கட்டுப்பாடு படையினரால் விதிக்கப்பட்டுள்ளது. வள்ளத்தைத் தாங்கிச் செல்லவும் மீண்டும் கரைக்குத் திரும்பிவரவும் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் சென்றுவிடுவதனால் சுதந்திரமாக ஆறுதலாகத் தொழில் செய்யமுடியாத் நிலையே தமக்கு ஏற்படுவதாக மீனவர்கள் பலர் தெரிவித்தனர்.

### தொழிலுக்கு 1500 பேர்

குருநகர் இறங்குதுறையூடாக தினமும் சுமார் 1500இற்கு மேற்பட்ட மீனவர்கள் குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று வருகிறார்கள் என மீனவர் சங்கங்கள் தெரிவித்தன. இவர்கள் மீன்பிடிக்கக் கொண்டுசெல்லும் மீனபிடி உபகரணங்கள், உணவு வகைகள் இராணுவத்தினரால் சோதனை செய்யப்படுவதுடன் மீனவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக உடற்சோதனை செய்யப்பட்ட பின்னரே கடலில் இறங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

குடாக்கடல் பகுதி ஆழம் குறைந்த பகுதியாகும். இங்கு இழுவை றால், பட்டி வலை, பாய்ச்சு வலை, களங்கட்டி ஆகியவைகள் மூலமே அதிக மீனைப் பிடிக்கமுடியும். இத்தொழில் செய்வதற்குக் கரைக்குச் செல்ல வேண்டிய தேவை உண்டு. ஆனால் கரையில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் சென்றே தொழில் செய்யவேண்டும் என்பது படையினரின் கட்டளையாக இருப்பதனால் இவ்வலைகள்மூலம் மீன்பிடிப்பது சிரமமாக உள்ளது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மீன்பிடித் தொழில் செய்வது காலநிலை மாற்றம், நீர் மாற்றம என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இராணுவத்தினர் மீன்பிடிக்க அனுமதித்துள்ள நேரம் அதிகாலை 3 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை. நீரின் மாற்றத்துக்கேற்ப பட்டி வலையினுள் செல்லும் மீன்கள் வேறு நீர மாறும்போது பட்டி வலையில் இருந்து வெளியேறிவிடுவதும் உண்டு. உள்ளே செல்லும் மீன்களை அந்த நீர் முறைக்கேற்ப தரித்துநின்று பட்டியிலுள்ள வாசலை மூடுவதன்மூலம் மீன் வெளியேறாமல் தடுக்கமுடியும் எனவும் நாள முழுவதும் மீன்பிடிக்க அனுமதிப்பதன் மூலம் குடாக்கடலில் மீனவர்கள் சிறந்த முறையில் மீனைப் பிடிக்கமுடியும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய இடங்களில் மீன்பிடித்துவரும் மீனவர்கள் தமது மீன்களை உடனடியாக எதுவித சிரமமுமின்றி சந்தைப்படுத்தக்கூடியவாறு அவர்களுடைய மீன் வாடிகள், அவர்கள் தொழில் செய்து, வள்ளங்கள் விடும் கரைக்கு அருகிலேயே அமைந்துள்ளன.

### சுமையுடன் 100 மீற்றர் தூரம் நடக்கவேண்டும்

பாஷையூர், நாவாந்துறை, சாவல்கட்டு மற்றும் வடமராட்சியில் உள்ள இடங்களில் மீன்பிடித்துவரும் மீனவர்கள் தமது மீன்களை கரையில் கொண்டுவந்து இறக்கியதும் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள வாடியில் சந்தைப்படுத்தக்கூடியதாக மீன் சந்தைகள் அமைந்துள்ளன.

ஆனால், குருநகர் மீனவர்கள் குருநகர் இறங்குதுறையில் வள்ளங்களைத் தரித்த பின்னர் தமது மீன்களையும் தாம் கொண்டு சென்ற மீனபிடி உபகரணங்களையும் தமது கரங்களில் காவி எடுத்து வந்து சுமார் 100 மீற்றர்வரை நடந்து குருநகர் புதிய பூங்கா வீதியையடைந்து தமது கடல் பாஸினை இராணுவத்தினரிடம் ஒப்படைத்த பின்னர் தமது அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு வெளியேறும் நிலை உள்ளது.

அங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க வளவில இயங்கும் மீன்வாடியில் மீனைச் சந்தைப்படுத்துகிறார்கள்.

ஏனைய இடங்களில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு உள்ளது போன்று கடலுக்கு அருகில் மீனைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பை இராணுவம் வழங்கினால் இத்தகைய துன்பங்களைத் தாம் அனுபவிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்று மீனவர்கள அங்கலாய்க்கின்றனர்.

### சுகாதாரச் சீர்கேடு

குருநகர் புதிய கடற்கரை வீதி, குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையின் தெற்குப்புறம் அமைந்துள்ள வீதியும் அதனுடன் இணைந்த கடற்பகுதி, அலுப்பாந்திப் பகுதி ஆகியவைகளை மக்கள் பாவிப்பதற்கு இராணுவம் தடைசெய்துள்ளதனால் குருநகரில் சுகாதார சீர்கேடுகள் உருவாகி வருகின்றன.

குருநகரில் கடல் அட்டை, இறால ஆகியவைகளைப் பதனிட்டு விற்பனைக்காகச் சந்தைப்படுத்தும் தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது.

கடல் அட்டைகளை மீனவர்களிடமிருந்து வாங்கி அவைகளிலுள்ள அழுக்குகளை அப்புறப்படுத்திய பின்னர் அவற்றை அவித்துக் காயவைப்பதற்கு தற்போது இராணுவம் தடைசெய்துள்ள பகுதியே இவர்களால் முன்னர் பயன்படுத்தப்பட்டது. கடல் அட்டையிலுள்ள கழிவுகள் கடலில் கொட்டப்பட்டன. இதனால் எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லை.

கடலை அண்டிய வீதிகள் இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டுள்ளதனால் தற்போது கழிவுகள் அனைத்தும் வாய்க்கால்களில் கொட்டப்படுகின்றன.

மீனவர்கள் தங்களின் வலைகளில் சேரும் பாசிகளை அப்புறப்படுத்துவதற்காக கரைக்கு எடுத்து வந்து காயவைப்பது வழக்கம். அத்துடன் நண்டுகள் வலைகளைக் கடித்தும் பிய்த்தும் விடுகின்றன. அந்த வலைகளைச் சுத்திகரிக்கவும் திருத்துவதற்கும் தடைசெய்யப்பட்ட பகுதிகளே முன்னர் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், தற்போது மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியிலுள்ள வீதிகளையே இந்த வேலைகளுக்காக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இவ்வீதிகள் துர்நாற்றம் வீசுவதுடன் இவ்வீதிகளினூடாக போக்குவரத்துச் செய்வதும் மிகவும் சிரமமாக உள்ளது. அத்துடன் இவ் வலைகளை ஈரத்துடன் காயவைக்கும் சந்தர்ப்பங்களில் வலைகளிலுள்ள அழுக்குகளினால் பொது மக்கள் வழுக்கிவிழும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சேதமடைந்த யாழ்.மாநகர சபைக் கட்டடத்துக்கு அருகில் தெற்கு நோக்கிச் செல்லும் யாழ்ப்பாணம் முன் வீதியும், அவ்வீதியுடன் இணைந்து செல்லும் கடற்கரை வீதியும் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்கு வீதி வரை பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குருநகர் கடற்கரை வீதியில் சவக்காலைச் சந்தியில் வீதியை மறித்தவாறு இராணுவத்தினரின் சோதனைச்சாவடி அமைந்துள்ளது. இதே கடற்கரை வீதியில் பழைய பூங்கா வீதி தொடக்கம் பாஷையூர் வரையுள்ள வீதியும் மக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு இராணுவத்தினரே தொடர்ந்தும் தங்கியுள்ளார்கள்.

### பஸ்சேவை நடத்த முடியாத நிலை

இந்த வீதித்தடை காரணமாக நகரில் இருந்து கொழும்புத்துறை வரை நடைபெற்ற 790ஆம் இலக்க பஸ் சேவையை ஆரம்பிக்க முடியாத நிலை தொடர்கிறது.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறையில் துண்டி வரையுள்ள பகுதிகளில் மக்கள் மீளவும் பெருமளவில் குடியேறி இயல்பு வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். எனவே யாழ் - கொழும்புத்துறை பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம். இதனை ஆரம்பிக்க வசதியாக குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி யாழ் மாநகரசபையின் குருநகர் உறுப்பினர் எம்.எட்வேட் மற்றும் குருநகரில் உள்ள பொது அமைப்புக்களால் இராணுவ உயரதிகாரிகளிடம் மகஜர்கள் வழங்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்கு வீதியில் கடற்கரை வீதிக்கு சமீபமாக அமைந்துள்ள மீன்பிடி கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியை மீளவும் இயக்க அனுமதி வழங்குமாறு மீன்பிடி அமைச்சர் மஹிந்த விஜயசேகரவிடம் இக்கல்லூரி அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை மகஜர் சமர்ப்பித்துள்ளார்.

தற்போது இக்கல்லூரி குருநகர் பாங்ஷால் வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் வசதிகள் குறைந்த நிலையில் இயங்கிவருகிறது.

இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவச் சோதனைச்சாவடிகள் அகற்றப்படவேண்டும். வெளி இணைப்பு இயந்திரம் பாவித்து தொழில் செய்ய அனுமதிக்கவேண்டும்; இரவு பகல் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்பதே குருநகர் மக்களின் முழு எதிர்பார்ப்பும். அந்த நாளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் குருநகர் மக்கள்.

★

# யுத்த சூழ்நிலை காரணமாக மாணவர் உடல் நலம் பாதிப்பு

## வவுனியாவில் நடந்த ஆய்வில் கண்டறியப்பட்டது

வவுனியா,மே4

யுத்தச்சூழல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களினால் மாணவர்கள் மற்றும் சிறுவர்களின் பொதுவான உடல்நலம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ், வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுகாதார ஆய்வு நடவடிக்கையின் மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது.

வவுனியாவில் உள்ள 54 பாடசாலைகளில் கல்வி பயிலும் 21ஆயிரத்து 123 பிள்ளைகளை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியதன் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்திய ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 23 வீதமானவர்கள் நீண்ட கால புரதச்சத்து போஷாக்கின்மையாலும், 36 வீதமானவர்கள் குறுகியகால புரதச்சத்துப் போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். குருதிச்சோகையினால் 13 வீதமானவர்களும், பல் சம்பந்தமான குறைபாடுகளினால் 24 வீதமானவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் 576 பிள்ளைளுக்கு பார்வைக் குறைவு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்குவதற்கு வவுனியா அரசாங்க அதிபரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக டாக்டர் கேதீஸ்வரன் தெரிவித்தார்,

கர்ப்பிணித்தாய்மார்கள் உட்பட போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு போஷாக்கு விழிப்புணர்வு கருத்தரங்குகள் சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

சத்துணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் ஆறுமாத காலத்திற்குத் தேவையான விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்தை உள்ளடக்கிய 'விற்றமின் 'ஏ' மெகா டோஸ்' பாடசாலை மாணவர்கள் 24ஆயிரத்து 195 பேருக்கும், முன்பள்ளி சிறுவர்கள் 834 பேருக்கும், நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 626 பெரியவர்களுமாக, மொத்தம் 32ஆயிரத்து 655 பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் ருபெல்லா எனப்படும் ஜேர்மன் சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பூசி 756 பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள குடும்ப நல மருத்துவ தாதியர் பிரிவுகளில் ஐந்து வயதுக்குட்பட்ட 2ஆயிரத்து 75 மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு போஷாக்கு மதிப்பீட்டின்படி, இவர்களில் 37 வீதமான மாணவர்கள் போஷாக்கு குறைந்தவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புக் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கர்ப்பிணித் தாய்மார்கள், அவர்களின் கணவர்களுக்கு தாய், சேய் நலம் பற்றி விளக்கமளிப்பதற்காக பெற்றோருக்கான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வவுனியா வைத்திய சுகாதார பிரிவில் ஏற்பட்டுள்ள போஷாக்கின்மை பாதிப்புகள் குறித்து வவுனியா அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ம)

# பளைப் பகுதியில் தேங்காய் திருட்டை கட்டுப்படுத்த புலிகள் நடவடிக்கை

தென்மராட்சி,மே4

பளைப் பிரதேசத்தில் தேங்காய்த் திருட்டைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறையை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேசத்தில் உள்ள வீடுகளைப் பார்த்து வரச் செல்வோர் தேங்காய் எடுத்து வருவதாயின் பளையில் உள்ள அலுவலகத்தில் முன் அனுமதி பெறவேண்டும். முன் அனுமதி பெறுவதற்கு குடியிருப்புக் காணியின் அல்லது தென்னந்தோட்டக் காணியின் உறுதியின் புகைப்படப் பிரதி சமர்ப்பிக்கவேண்டும் என்றும்-

உறுதி இல்லாதோர் காணி உள்ளதை உறுதிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான அறிவித்தல்

யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பின்வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 6.5.2002 திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, காரைநகர், அளவெட்டி மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.

இக் கலந்துரையாடலுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் நாளை (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறுவதால் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களைத் தவறாது பங்கு பற்றுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை. மாவட்டச் செயலாளர். (C-22016)

# தேவை

ஜெயம் மிக்சர் சென்ரருக்கு மிக்சர், Sweets வகைகள் தயாரிப்பதற்கு அனுபவம் வாய்ந்தவர்கள் உடன் தேவை. நேரில் வரவும்.

**ஜெயம் மிக்சர் சென்ரர்,**
103, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(3427)

## TELEPHONE (MOTOROLA) OWNERS UNION
### தொலைத்தொடர்பு நிலைய (மோட்டோரோலா) உரிமையாளர் சங்கம்
### அவசர பொதுக்கூட்டம்

காலம் : 05-05-2002 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்

இக்கூட்டத்தில் சோலர் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் நடைபெறவிருப்பதால் சகல மோட்டோரோலா உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

த.தேவராஜா — தலைவர்.
ஆ.சூரியகுமாரன் — செயலாளர்.

"ஸ்ரீசாலினி"
காங்கேசன்துறை வீதி,
இணுவில்
03-05-2002 (3443)



## கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலய நூதன மூர்த்திகள் தெருவீதி உலா விஞ்ஞாபனம்

ஐயப்பன் அடியார்களே,

நிகழும் சித்திரபானு வருட சித்திரை மாதம் 23ஆம் நாள் 06-05-2002 திங்கட்கிழமை காலை 9.30மணிமுதல் ஊர்வலத்துக்கான வழிபாடுகள், பஜனைகள் நடைபெற்று பிரதான வீதிகள் வழியாக ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலய நூதன மூர்த்திகள் ஊர்வலமாக ஆலயத்துக்குக் கொண்டுவரப்படும்.

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள S.V.M. வர்த்தக ஸ்தாபனத்தில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும். இந்த விழாவில் குருமார்கள், பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு இந்த மூன்று நாள் நடைபெறும் ஊர்வலத்தைச் சிறப்பித்து உங்களால் இயன்ற நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி போன்ற உதவிகளை வழங்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

சபரீச ஐயப்பன் ஆலய நிர்வாக சபை.
(3440)

அனுசரணை: சுவிஸ்ஸோ நகைத் தொழிலகம்.

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
### சங்கப் பொதுச்சபை அங்கத்தவர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் 2002ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபைத் தெரிவும்
(05-05-2002)

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் நாளை (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு சங்கத் தலைவர் திரு. சி.சுந்தரலிங்கம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவிருக்கின்றதென்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி.சுந்தரலிங்கம் — மாவட்ட தலைவர்.
கு.காந்தரட்ணம் — மாவட்ட செயலாளர்.
(C/22017)

## ஈஸ்வரம்மா தின விழா

யாழ்ப்பாணம்,மே4

ஈஸ்வரம்மா தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலைய மண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

மாலை 4.30 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

யாழ்.கனகரத்தினம் ம.ம.வித்தியாலய ஆசிரியை திருமதி பாக்கியலட்சுமி கனகரட்ணம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு விசேட பஜனை நடைபெறும். (ஐ)

## மிருசுவில் றோ.க.வித்தியாலய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே4

மிருசுவில் றோ.க.வித்தியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

அன்றைய தினத்தில் தரம் - 1 முதல் தரம் - 5 வரையான வகுப்புகளில் கற்க விரும்பும் மாணவர்களையும் சகல ஆசிரியர்களையும் சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார்.

ஏனைய வகுப்புக்களில் பயில விரும்பும் மாணவர்களை தமது விபரங்களைப் பதிவு செய்யுமாறும் திருப்திகரமான அளவு மாணவர்கள் இணைந்ததும் ஏனைய வகுப்புக்களும் ஆரம்பமாகுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே4

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

☆ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணி எதிர் மருதங்கேணி பிரதேச செயலக அணி.

☆பருத்தித்துறை பிரதேச செயலக அணி தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

(ஐ-86)

☆ ☆ ☆

வலி.வடக்கு,மே4

இலங்கை எறிபந்துக் கழகம் (Throw Ball Association) எதிர்வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தவிருக்கின்றது.

ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கு தனித்தனியாக நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள், கழகங்கள் யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜேரூபசங்க வுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மே4

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் தனது 43ஆவது நிறைவு விழாவை ஒட்டி நிலையம் உள்ளக வீரர்களுக்கான 'செற்றப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடத்தவிருக்கின்றது. (ஐ-3)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ சுதர்சன சக்கர வழிபாடு இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நவகலச ஆராதனை, புருஷ சுத்த பாராயணம், ஸ்ரீ சுதர்சன ஹோமம் என்பன இடம்பெறுவதுடன் அபிஷேகமும் தீபாராதனை என்பனவும் நடைபெறும்.

(க-13)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மே4

ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தின் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இந்நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும், பவனியும் இடம்பெறுவதுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (க-10)

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1953 - 11 - 05



விண்ணில் 2002 - 02 - 04

## அமரர் கந்தையா சத்தியசீலன்

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த எம் சத்தியனே!
பல காலம் வாழ்வீரென நாமிருக்க
பாதியிலே பிரிந்து சென்றதேனோ?
பாரினில் நாம் பரிதவிக்க காலனவன் கவர்ந்துவிட்டான்
தொண்ணூறு நாள்கள் உருண்டோடி விடினும்
எம் கண்ணீரோ வற்றாது
காலமெல்லாம் உம் நினைவில்
வாழ்ந்திடுவோம் இப்பாரினிலே!

உம்பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், தாய், தந்தை, மாமா, மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

டச் றோட்,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (C/22022)

# நன்றி நவிலல்

தோற்றம் 23 - 12 - 1940



மறைவு 06 - 04 - 2002

## அமரர் திருமதி மங்கையர்க்கரசி சுந்தரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

எங்கள் குடும்பத் தலைவி மங்கையர்க்கரசிக்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும், கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் வைத்தியம் செய்த டாக்டர்கள், மருத்துவத்துறை உத்தியோகத்தர்களுக்கும், பலவழிகளிலும் உதவிகள் செய்த நண்பர்கள், உறவினர்களுக்கும், அவரது இறுதிக்கிரியையின் போதும் அதன்பின்பும் எங்கள் வீட்டிற்கு வந்து தங்களது அன்பையும், ஆதரவையும், அனுதாபங்களையும் வெளியிட்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், ஊரவர்கள், சக ஆசிரியர்கள், கல்வித்துறை அதிகாரிகள் கடிதமூலமும், 'போன்' மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கள் எல்லோருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

30, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3445)
கணவர்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை,
மருமகள்: இராஜராஜேஸ்வரி மணிவண்ணன்
பேரப்பிள்ளைகள்: ம.திருமகள், ம.சுபாஜினி.

## கண்ணீர் அஞ்சலி

செல்வன் பிறேமச்சந்திரன் முகிலவன்

(அரசடி - தொண்டமனாறு) எமது பிரதேச செயலகத்தில் கிராம சேவையாளராகக் கடமையாற்றும் திரு.வ.பிறேமச்சந்திரன் அவர்களின் புதல்வன் செல்வன் முகிலவன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.
பிரதேச செயலரும், நலன்புரிச்சங்க உத்தியோகத்தரும், ஊழியர்களும். (3439)

# கண்ணீர் அஞ்சலி

பழைய மாணவர் சங்கத் தலைவரும்
150ஆவது ஆண்டு விழாச்சபை செயலாளருமாகிய
கலைஞானகேசரி S.K.தங்கவடிவேல் J.P.
அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி தசதரன் பொன்னம்மா

அவர்கள் 03-05-2002இல் காலமாகியதையிட்டு நாம் மிக மனம் வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
(3438)

## தெற்கு வர்த்தகர்களின் வருகையால்

# நடைபாதை வியாபாரம் நகரில் சூடுபிடிக்கின்றது!

யாழ்ப்பாணம்,மே4

தென்பகுதி வர்த்தகர்களின் வருகையினால் யாழ்நகரப் பகுதியில் நடைபாதைக் கடை வியாபாரம் சூடுபிடிக்கின்றது.

சிறு வியாபாரிகள் தாம் எடுத்து வருகின்ற மின்சார உபகரணங்கள், 'ஸ்குறூட் றைவர்கள்', சைக்கிள் சாவிகள், கத்தரிக்கோல்கள் போன்ற சிறு பொருள்களை இவ்வாறு நடைபாதைக் கடைகளில் வைத்து விற்பனைசெய்து வருவதைக் காணமுடிகின்றது. அவற்றைக் குறைந்த விலையில் வாங்குவதற்கு மக்கள் முண்டியடிக்கின்றனர்.

முஸ்லிம்கள் மற்றும் தென்பகுதி வர்த்தகர்கள் தரைவழியாகப் பொருள்களை இங்கு எடுத்துவந்து விற்கின்றனர். இதனால் பொருள்கள் மலிவு விலையில் கிடைக்கின்றன.(ஐ-10-139)

## மிக நீண்ட காலத்தின் பின்னர்

# கொழும்பில் இறப்போரின் சடலம் தரை வழியாகக் குடாநாட்டுக்கு!

தென்மராட்சி,மே4

கொழும்பில் உயிரிழந்த ஒருவரது சடலம் கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

கொழும்பில் இருந்து சடலம் குடாநாட்டுக்கு தரைவழியாக எடுத்து வரப்பட்டிருப்பது மிக நீண்ட காலத்தின் பின்னர் இதுவே முதல்முறையாகும்.

புலோலியைச் சேர்ந்த ஒருவரின் சடலமே நேற்றுமுன்தினம் முகமாலை ஊடாகக் கொண்டுவரப்பட்டது.

கொழும்பில் மரணமாவோரின் சடலங்களை இங்கு கொண்டுவருவதில் ஏற்படும் சிரமங்கள் காரணமாக கடந்த காலங்களில் கொழும்பிலேயே இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# இராணுவத்தை விட்டு ஓடுவோருக்கு எதிராகப் புதிய நடைமுறை வரும்

கொழும்பு,மே4

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடுபவர்களுக்கு எதிராக ஒரு தெளிவான நடைமுறைச் சட்டத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக சிரேஷ்ட இராணுவ உயர் அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த இரு வாரங்களுக்குள் இது தொடர்பான ஓர் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் என, இலங்கை இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் எல்.சி.ஆர்.குணவர்த்தன கூறினார். (ம)

# தென்மராட்சி ஓய்வூதியர்களின் 'வவுச்சர்'கள் சொந்த முகவரிக்கு!

தென்மராட்சி,மே4

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து பிரதேச ஓய்வூதியர் கிளையினர் ஜூன் மாதம் தொடக்கம் ஓய்வூதியர்களின் வீட்டு முகவரிக்கு ஓய்வூதிய வவுச்சரினை அனுப்பவுள்ளனர்.

இதன் பிரகாரம் மே மாத ஓய்வூதிய வவுச்சர்களுடன் ஓய்வூதியரின் தற்காலிக, நிரந்தர முகவரிகளின் விவரங்களைக் கோரும் படிவமும் இணைக்கப்பட்டு அனுப்பப்படுவதாகவும், அப்படிவத்தினைப் பூர்த்தி செய்து மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறும் ஓய்வூதியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## 90 நாள் நினைவில்.....

04-05-2002

**அமரர் கந்தையா சத்தியசீலன்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1953.11.05 | 2002.02.04 |

ஒரு செடியில் பூத்த பாசமலரே!
உம்பிரிவு எம்மை
கதி கலங்க வைத்து விட்டதே!
விதியின் சதியே உறவைப் பிரித்ததுவே!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிரிவால் கலங்கும்:
ஜெயக்கொடி சாந்தா
(சகோதரி)

*நாவாலி வடக்கு, மானிப்பாய்.* (3452)


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சுத்திகரிக்கப்பட்ட BAIRHA FARM கோழி இறைச்சி 1kg - 200/- ரூபா. மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு கொடுக்கப்படும். அத்துடன் CHICKEN SAUSAGES, MEAT BALLS, PORK SAUSAGES, PAWKIES, ANCHOR BUTTER, MEDOWLEA மாஜரின் என்பனவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: வரணி மிசன் பண்ணை விற்பனை நிலையம்
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.: 2868
(3449)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கோமதி சிவனொளிச்செல்வன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயர் அடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி.
(3448)

## வெள்ளைப்பூரான் கடிக்கு இலக்கான சிறுவன்

தென்மராட்சி,மே4

கடந்த திங்கட்கிழமை மந்திகை அரச களஞ்சியத்தில் பொருள்கள் ஏற்றியவேளையில் வெள்ளைப்பூரானால் கடியுண்ட தனது சகோதரனின் உடைகளைக் கழுவுவதற்காக எடுத்துச் சென்ற சிறுவன் உடுப்பினுள் மறைந்திருந்த வெள்ளைப்பூரானால் கடியுண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் கரவெட்டி மேற்கு ஸ்ரீ நாரத வீதியில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த யோகராசா தஷ்மன் (வயது 12) என்னும் சிறுவனே இவ்வாறு வெள்ளைப்பூரானால் கடியுண்ட நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார்.

இதேவேளை, வீதியில் காணப்பட்ட பனை ஓலை மீது சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞரைக் கருங்குளவிகள் துரத்திக் குத்தி காயப்படுத்திய சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் வரணி இடைக்குறிச்சியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் காயமடைந்த - இதே இடத்தைச் சேர்ந்த - வ.சுரேந்திரன் (வயது 22) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிகப்பட்டுள்ளார். (உ-117)

## ஹொக்கி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே4

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக விளையாட்டரங்கில் இடம்பெற்றுவரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 7.30மணி - ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி எதிர் கோப்பாய் வி.க. அணி.

★ காலை 8மணி - கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. 'ஏ' அணி எதிர் உடற்கல்விப் பிரிவு 'சிவப்பு' அணி.

★ காலை 8.30மணி - யாழ். பல்கலைக்கழக 'கோல்ட்ஸ்' அணி எதிர் யாழ். பல்கலைக்கழக 'புளூஸ்' அணி.

★ காலை 9மணி - செவன் ஸ்ரார் வி.க. அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. 'பி' அணி.(உ-3)

## மரம் நடுகையும் சிரமதானமும்

தென்மராட்சி,மே4

எதிர்வரும் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் சர்வதேச செஞ்சிலுவை தினத்தையொட்டி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளையினர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நாளை மரக்கன்றுகளை நாட்டுவதுடன் ஆஸ்பத்திரி வளவில் சிரமதானப் பணியினையும் மேற்கொள்ளவுள்ளனர்.(உ-117)

## கருத்துரை

வலி.வடக்கு,மே4

சாந்திகம் உளவளதுணை நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை முற்பகல் 10.30மணிக்கு சாந்திகம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கலாநிதி கூஸ் வன்டேவியர் உரையாற்றுவார்.

"ஆயுத முரண்பாடுகளினால் உளநலம் மிக்கவர்கள் மீது ஏற்பட்ட உளத்தாக்கம்" என்னும் தலைப்பில் அவர் கருத்துரை வழங்குவார். (உ-86)


நாகம்ஸ் சுன்னாகம்
4ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
றொப்ஸ்டார் பிரசாந்த்,
சிம்ரன், வடிவேலு நடிக்க
தமிழ் (சீனஸ்)
காட்சிகள்:11.00,3.00,6.30 (பு.நே.)
8ஆம் திகதி முதல் கன்னுபடப்போகுதையா
(3436)

ராஜா யாழ்ப்பாணம்
4ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/21980)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், மீனா, மனோரமா,
மணிவண்ணன் நடித்த
பெரியண்ணா
தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-21981)


## முழங்காவில் நோக்கிச் சென்றவேளை

# நாவற்குழியில் மினிபஸ் விபத்து பயணிகள் ஏழு பேர் காயம்!

யாழ்ப்பாணம்,மே4

வன்னிக்குச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று நாவற்குழியில் நேற்றுக காலை 10 மணியளவில் தடம்புரண்டது. அதில் பயணஞ்செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்.

முழங்காவில் செல்வதற்காக வேலணையில் மினிபஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியவர்கள் முகமாலை நோக்கி அந்த மினிபஸ்ஸில் சென்றுகொண்டிருந்த சமயமே இந்த விபத்து நிகழ்ந்தது.

நாவற்குழி இறால் தொழிற்சாலைக்கு அண்மையில் வீதியைவிட்டு விலகி மினிபஸ் புரண்டது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சபாபதி கந்தசாமி வயது - 45), இவரது பிள்ளைகளான கந்தசாமி சரவணன் (வயது - 18), கந்தசாமி பிரசன்னா (வயது - 17), கந்தசாமி தனேஷ் (வயது - 12) மற்றும் நாகராசா பூரணம் (வயது - 72), செல்லத்துரை செல்வதி (வயது - 47), செல்வராசா ரேணுகா (வயது - 21) ஆகியோரே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

21 பேர் பயணஞ்செய்த இந்த மினி பஸ்ஸிலிருந்த ஏனைய 14 பேரும் தெய்வாதீனமாகக் காயமேதுமின்றி தப்பித்துக்கொண்டனர். (ஐ-15-139)

# உன்னிச்சைக் காட்டில் மனித எலும்புக்கூடு மீட்பு

செங்கலடி,மே4

உன்னிச்சை, நெடியமடு காட்டுப் பகுதியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு அடையாளம் காண்பதற்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த எலும்புக்கூடு குறித்து மட்டக்களப்பு மாவட்ட நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அதனை மீட்டுவருமாறு அரச அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் உதவியோடு எலும்புக்கூடு கொண்டுவரப்பட்டது. அந்த இடத்தில் இருந்த சைக்கிள் ஒன்றும் எடுத்துவரப்பட்டு மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# ஓட்டோ குடை சாய்ந்ததில் ஒரே குடும்பத்தவர் மூவர் காயம்

## கரணவாய்ப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,மே4

வீதியில் வந்த வாகனத்திற்கு இடம்கொடுப்பதற்காக வீதியோரமாகச் சென்ற ஓட்டோ ஒன்று தடம்புரண்டு குத்துக்கரணம் அடித்ததில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கரணவாய் குஞ்சா கடைப் பகுதியல் இடம்பெற்றது.

பருத்தித்துறை மாதனைப் பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 63), அவரது மனைவியான சிவசுப்பிரமணியம் வசந்தாதேவி (வயது 61), மகளான சிவசுப்பிரமணியம் சுமதி (வயது 18) ஆகியோரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

விபத்து இடம்பெற்ற வேளையில் மயங்கிய நிலையில் காணப்பட்ட சி.வசந்தாதேவி அணிந்திருந்த மூன்று பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் ஓட்டோ பலத்த சேதங்களுக்கு இலக்கானது. ஓட்டோ சாரதியான அன்ரனி என்பவருக்கு தலையில் காயமேற்பட்டு மந்திகை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றார். (ஐ-117)

## மரண அறிவித்தல்கள்

### கணபதி ஜீவகாருண்யம் (B.A.)

(நிறைவேற்று அதிகாரியும் உதவி முகாமையாளரும் இ.போ.ச. காரைநகர் சாலை)

காம் வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 187, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி ஜீவகாருண்யம் 28.04.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - யோகம்மா தம்பதிகளின் மருமகனும் ஜெயரெட்ணத்தின் அன்புக் கணவரும் இராஜகோபால், Dr.பேரின்பநாயகம், நேருஜிநேசன், மகேஸ்வரி, கமலகுமாரி ஆகியோரின் சகோதரரும் விஜியகாந்தன், ஜெயசீலன், லதக்குமார், தேவகுமார், ரஞ்சினிதேவி, அருள்நாயகி, ஜெயந்தி, மேகனலதா, மகிழினி, ஜெகசோதி, சச்சிதானந்தம் ஆகியோரின் மைத்துனரும் பசுபதி, மாணிக்கம் ஆகியோரின் பெறாமகனும் யோகலிங்கத்தின் சகலனும் ஜெனனி, யாழினி, கஜந்தினி, நிலாஜினி, சிவாஜினி, அம்பிகைபாலன், கேதீஸ்வரன், விக்னேஸ்வரன், ஹரிகரன், சர்மினி, சோபனா ஆகியோரின் மாமனாரும் அகிலன், ஜீவிதா ஆகியோரின் பெரிய தந்தையும் பிரதிஸ்குமார், சயந்தினி, மிதுலன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாளை (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜீ.ஜெயரெட்ணம்
(மனைவி)

*187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (3451)

### வ.சின்னத்தம்பி

(ஆலய பாதுகாவலர்)

தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வ.சின்னத்தம்பி அவர்கள் 01-05-2002 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04-05-2002) சனிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு (புதிய நேரம்) 196, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.செல்லம்மா
(மனைவி)

*196, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (3450)

# விசேட அடையாள அட்டைகள் வழங்கும் பிரிவுக்கு மூடுவிழா

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.செயலகத்தில் இயங்கிவநத விசேட அடையாள அட்டை வழங்கும் பிரிவு நேற்றுமுன்தினம் முதல் மூடப்பட்டது.

ஆள்கள் பதிவுகள் திணைக்கள ஆணையாளரின் பணிப்பின் பேரில் இந்தப் பிரிவு மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வைத்தொடர்ந்து குடாநாட்டுக்கு மக்கள் திரும்பிய பின்னர்,படையினரின் அறிவுறுத்தலுக்கமைய குடாநாட்டில் சகலருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவந்தன.

இந்த அடையாள அட்டை வழங்கும் பணிக்கான நிதி ஒதுக்கீடு தமக்கு வழங்கப்படவில்லை என்றும்-

தொடர்ந்தும் தமது திணைக்களத்தில் இருந்து நிதி வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

இதன் காரணமாக இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் பிரிவை மூடி, அங்கு பணிபுரிபவர்களை வேலையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும்

ஆள்கள் [illegible] ணக்கள ஆணையாளர் யாழ்.செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து இந்தப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

(உ-3-15)

## பேச்சுக்கு முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்குவது குறித்து சிந்திக்க வேண்டும்.

✪ இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கையளிக்கும் முடிவை அரசு உடனடியாகக் கைவிடவேண்டும். ஈழக் கோரிக்கையைப் புலிகள் முற்றாகக் கைவிட்டால் இடைக்கால நிர்வாகத்தில் அவர்களுக்கும் இடமளிப்பது பற்றிச் சிந்திக்கலாம்.

✪ பேச்சுக்களின் மூலம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். மக்களின் நெருக்கடிகள் தீர்ந்தால் மட்டுமே பேச்சுக்கள் வெற்றிகரமாக அமையும்.

✪ சமாதான முயற்சிகளில் பிரதமா உண்மையான அக்கறை கொண்டவராக இருந்தால் எதிர்க்கட்சிகளுடன சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடவேண்டும்.

✪ சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்படவேண்டும்.

✪ அரசமைப்பிற்குப் பகுதி பகுதியாகக் கொண்டுவரப்படும் சீர்திருத்தங்களை ஆதரிப்பதில்லை.

✪ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க எடுக்கும் முயற்சியை எதிர்ப்பது.

✪ அரசு முன்னெடுக்கும் சகல விடயங்களிலும் ஜனாதிபதி தனது சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி பங்குபற்றவேண்டும். (உ-3-4-12)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் கலந்துரையாடினார்.அதன் பின்னர் மூதூர் கிழக்குப் பகுதிக்குச் சென்று அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்களுடன் அவர் கலந்துரையாடினார். அதன்பின்னர் அவர் கொழும்பு திரும்பியுள்ளார்.(உ-3-4-21)

## பதற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் தமது ரோந்துக் கப்பல்களில் இணைத்துள்ள வீடியோக் கருவி மூலம் பதிவுசெய்யப்பட்ட ஒளிநாடாக்களின் தரவுகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இச்சம்பவம் குறித்து விரைவில் தனது அறிக்கையை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இப்படி இலங்கை வானொலியின் செய்தி மேலும் தெரிவித்தது. (உ-12)

## மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும் - சிதறிய படகின் சிதைவுகளிடையே மோட்டார்கள், ஆர்.பி.ஜிக்கள் என்பன மீட்கப்பட்டதாகவும் -

இச்சம்பவம் புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புலிகள் மீறுவதை எடுத்துக்காட்டுவதாகவும் - பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

ஆனால், கடற்படையினர் அப்பாவி மீனவர்களின் படகுகளையே தாக்கி அழித்ததாகப் புலிகள் குற்றம் சுமத்தினர்.

அதை உறுதிப்படுத்துவது போல இத்தாக்குதலில் தப்பிய முஸ்லிம் மீனவர் ஒருவர் கண்காணிப்புக் குழுவினரிடம் நேரில் வாக்குமூலமளித்தார்.

கடற்படைத் தாக்குதலில் காயமடைந்து கரைசேர்ந்த - வாழைச்சேனை வாசியான - நூர் முஹம்மது நஸீர் என்ற இந்த மீனவர் நேற்று மாலை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:-

அன்று மாலை மீன்பிடிப்பதற்காக ஆழ்கடலுக்குச் சென்றோம். மாலை 6.30மணியளவில் நான்கு கடற்படைப் படகுகள் வந்தன. அவற்றிலிருந்து எமது படகுகளை நோக்கிச் சரமாரியாகச் சுடப்பட்டது. தாக்குதலில் எமது படகு வெடித்துச் சிதறியது. படகில் இருந்த - எமது படகின் உரிமையாளர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

நானும், காயமடைந்த மற்றொரு மீனவரும் கடலில் குதித்து நீந்தினோம். அவர் நீந்தமுடியாது கஷ்டப்பட்டார். பின்னர் கடலில் காணாமற போனார். அவர் உயிரிழந்திருப்பார் என நினைக்கிறேன்.

நான் எனது காலில் ஏற்பட்ட காயத்துடன் சிரமப்பட்டு கரைசேர்ந்தேன்.

கடற்படையினரால் அனுமதிக்கப்பட்ட பகுதியிலேயே நாம் மீன்பிடித்துக் கொண்டிருந்தோம். அப்படியிருக்க எம் மீது ஏன் தாக்குதல் நடத்தினர் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை - என்றார் அவர்.

அவர் தற்போது சிகிச்சைக்கென வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-4-12)

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

விடுதலைப் புலிகளின் அந்தந்தப் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் இந்த அலுவலகங்களைத் திறந்துவைப்பர். (உ-3-117)

# தப்பிய இரு பெண் கைதிகளும் கோப்பாயில் வைத்துக் கைது!

யாழ்.சிறைச்சாலையிலிருந்து நேற்றுமுன்தினம் தப்பிய இரு பெண் கைதிகளும் கோப்பாயில் வைத்து நேற்றுப்பிற்பகல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

துர்நடத்தையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்.நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இரு பெண்கள், சிறைச்சாலை மதில் ஏறி தப்பியிருந்தனர். இவ்விரு பெண்களையும் கோப்பாயில் வைத்துக் கைதுசெய்த படையினர், அவர்களைப் பொலீஸாரிடம் கையளித்தனர்.பொலீஸார் இருவரையும் சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (உ-3)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப் பிரதமர் ரணில் கூட்டிய மாநாடு ஸ்ரீகோத்தாவில் நேற்று மாலை ஆரம்பமாகி இரவுவரை இடம்பெற்றது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள், பிரதேசத் தலைவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

"விடுதலைப் புலிகள் அமைப்பு பதிவுசெய்யப்பட்ட அரசியற் கட்சி. அந்த அமைப்பே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அக்கட்சி சுதந்திரமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அக்கட்சி சுதந்திரமாகப் பேச்சில் பங்குபற்றுவதற்கு அக்கட்சி மீதான தடை இடையூறாக இருக்குமானால் அந்தத் தடையை நீக்கலாம்" என்று பலரும் கருத்து வெளியிட்டனர்.

அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேசப் போகின்றோமா? இல்லாவிட்டால் அவர்களுடன் யுத்தம் புரியப் போகிறோமா? - இது குறித்து முடிவு செய்யவேண்டிய கட்டத்தில் நாட்டு மக்கள் உள்ளனர்.

பொலித்தீன் பைகளில் சதைத் துண்டங்களைப் பொறுப்பேற்கும் காலத்துக்குத் திரும்பப் போகிறீர்களா? அல்லது புன்முறுவலுடன் உங்கள் உடன்பிறப்புக்களை வரவேற்கப் போகிறீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டியது யார்? இன்றைய சமாதான முயற்சியைக் குழப்ப முயற்சிக்கும் சக்திகளா? அல்லது மக்களா?

இந்த முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் இந்தச் சக்திகளுககு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் - என்றார் அவர்.

சமாதான முயற்சிகளைக் குழப்ப முயலும் சக்திகளுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தை முன்னெடுப்பது என்று மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. (உ-3)

## பாரபட்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை பிரதமருக்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்திருந்தார். (உ)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான - பகைமை நடவடிக்கைகளைத் தவிர்க்க இரு தரப்பினரும் இணங்குகிறார்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சரத்துக்கு முரணாக தீவகத்தில் கடற்படையின் புலனாய்வுப் பிரிவினரும் ஈ.பி.டி.பியினரும் செயற்படுகின்றனர்; பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றும் பல விடயங்கள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (-3)


நாளை ஆரம்பம்
வணிகப்புள்ளிவிபரவியல்
காலை 9மணி
தவசேகர்
D.M.I
யாழ்நகர்.
(C-22023)

ஞானோதயா
சாவகச்சேரி
மீண்டும் ஆரம்பம்!
A/L 2004 & 03 CHEMISTRY
Sat. & Sun. 10 - 12a.m.
By:- அன்பழகன் (அன்பு)
(3407)

பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.பல்கலைக்கழக
(வெளிவாரி) விரிவுரைகள்
B.A. II
B.Com II
05-05-2002இல்
ஆரம்பமாகின்றன!
- இயக்குநர்.
(3444)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்
வரிசை மாற்றமும் சேர்மானமும்
Thu. 2.00 - 3.00
Fri. 12.30 - 1.30
BY: செந்தில்நாதன்
GENERAL CHEMISTRY
பிரிவு I Tue. 4.00-5.00
Fri. 3.30-4.30
பிரிவு II Wed., Thu.
7.00-8.00 a.m.(பு.நே.)
By: அன்பழகன் (அன்பு)
(3411)

SUBRA (14)
சித்தன்கேணி
CHEMISTRY
PAPER
Sat. & Sun. 5 - 6 p.m.
ORGANIC
Sat. & Sun. 6 - 7 p.m.
General Chemistry
Sat. & Sun. 4 - 5 p.m.
By: அன்பழகன் (அன்பு)
(3413)

மொடேன் கல்வி நிலையம்
நெல்லியடி
A/L 2003, 2004
வணிகப்புள்ளிவிவரவியல்
இன்று (4.5.2002) சனி 2.30 (பு.நே.)
ஆசிரியர்:- திரு.தவசேகர்
புவியியல்
இன்று (4.5.2002) சனி 11.30 (பு.நே.)
ஆசிரியர்:- திரு.கிருஷ்ணராஜா
சயன்ஸ் சென்ரர்
நெல்லியடி
ஆவணி மாதம்
நடைபெறவுள்ள
எழுதுவினைஞர் போட்டிப்
பரீட்சைக்கான வகுப்புகள்
விரைவில் ஆரம்பம்!
ஆசிரியர்:- திரு.தவசேகர்
(3428)

குகன்
ஆவரங்கால்
A/L 2004
General
Chemistry
Wed. 4 - 6 p.m.
By: அன்பழகன் (அன்பு)
(3410)

CCA
சுன்னாகம்
GENERAL
CHEMISTRY
ஆரம்பம்: 06.05.2002
Mon. 3.30 - 4.30, Fri. 5 - 6
By:- அன்பழகன் (அன்பு)
(3408)

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
வீரா
பிரதிகள் உடன்
பெற்றுக் கொள்ளலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C-22024)

தொடர்புகொள்ளவும்
லொறிமூலம் கொழும்புக்கு வாழைக்குலை, வெங்காயம், புகையிலை, இறால் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் குறைந்த கட்டணத்தில் அனுப்பலாம்.
தொடர்புகளுக்கு: ஈஸ்வரன் ரேடர்ஸ்.
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:021 - 2813 (C-22015)

நாவலர்
ஆனைப்பந்தி
A/L 2003
Chemistry Paper
Tue., Thu. 5 - 6
☆அலகு ரீதியான மீட்டல்
☆அலகு ரீதியான வினாவிடை
☆மாதிரி வினாக்கள்
☆அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
By: அன்பழகன் (அன்பு)
(3409)

தேவை
சுத்தமாக எடுக்கப்பட்ட வேப்பம் பூ, சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட வேப்பம் பூ வடகம் என்பன தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
குணகாஸ் றேடர்ஸ்,
இல. 432, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2354, 2719, 3135
(3441)

PERSONAL CENTRE
26, Catheadral Rd,
(ஆயர் இல்லமருகில்)
GENERAL CHEMISTRY
Mon. 7 - 8 a.m., Fri. 3 - 4 p.m.
By: அன்பழகன (அன்பு)
"நிலையியல்"
ஆரம்பம்: 3/5 Fri. 7a.m.
By: செந்தில்நாதன்
(3412)

IBMS
SCHOLARSHIP 2002/2003


ACTOS
இம்முறை IBMS கனனி நிறுவனத்தினர் உங்களுக்கு முற்றிலும் புதுமையான புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குகின்றனர். அது பற்றிய முழு விபரங்கள் 11-05-2002 அன்றைய உதயனில்................
BIT BIT புதிய பிரிவு
ICT நிறுவனத்தினால் நடாத்தப்படும் BIT தெரிவுப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15-05-2002 வரை ICT நிறுவனத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.
IBMS,
No.701, K.K.S. Road,
Jaffna.
Director (Ad.)
Institute of Business Management Studies

MOBILE NET MCS COMPUTER SERVICES
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் .(பரமேஸ்வராச்சந்தி அருகே)
கொழும்பு பல்கலைக்கழகத்தின்
தகவல் தொழில்நுட்பமாணி
BIT
விண்ணப்பிக்கத் தவறியோர் உடன்தொடர்பு கொள்ளவும்
BITதெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று பி.ப. 3.00 மணிக்கு


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.